
ஓம் விராட் விஸ்வப்பிரமணே நமஹ



சுழிபுரம்

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

1995

★ சகலவிதமான ஆங்கில மருந்து வகைகளும்

பால் மா வகைகளும்

அன்பளிப்புப் பொருட்களும்

நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்

# குறிஞ்சி மருந்தகம்

## இல. 3, நவீன சந்தை,
## திருநெல்வேலிச் சந்தி

ஆங்கில மருந்து வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

## கிளை: குறிஞ்சி மருந்தகம்

இல. 558 கேணல் கிட்டு சாலை,


(போதனா வைத்தியசாலை வீதி)

யாழ்ப்பாணம்

● வாடிக்கையாளரின் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி

உ

பூத்தவளே புவனம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவளே உன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.



# சுழிபுரம்
# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய
# கும்பாபிஷேக சிறப்பு மலர்

கும்பாபிஷேகம் 10-02-1995
மண்டலாபிஷேக பூர்த்தி 26-03-1995



# சமர்ப்பணம்

தொல்பதியாம் எங்கள் சுழிபுரப் பதியில் தானாக விரும்பிக் குடிகொண்டு இருக்கும் அன்னை பத்திரகாளியின் திருப்பாதங்களுக்கு இம் மலர் சமர்ப்பணம்

தீராத பிணி, நோய்களைத் தீர்த்தருளும் எங்கள் அன்னை பத்திரகாளித தாயின் கமல பாதங்களுக்கு இவ்வாடா மலர் சமர்ப்பணம்.



உ

# சுழிபுரம்
# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
## நிர்வாகிகள்



தலைவர்: அமரர் இ. சுந்தரம் சங்கானை

உபதலைவர்: திரு கு. நமசிவாயம் சுழிபுரம்

செயலாளர்: திரு கு. பொன்னுத்துரை சுழிபுரம்

உபசெயலாளர்: திரு கி. மகேந்திரராசா சுழிபுரம்

பொருளாளர்: திரு க. பாலசிங்கம் சங்கானை

நிதியாளர்: திரு க. சிவநேசன் சுழிபுரம்

நிர்வாக உறுப்பினர்கள்:

அமரர் சி. கனகரத்தினம் சுழிபுரம்

திரு க. முத்தையா சுழிபுரம்





உ

குருபாதம்

# நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகளின்

# நல்லாசிகள்

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே,

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நிகழ்வதை அறிந்து மகிழ்வுறுகிறோம். பராசக்திக்கு நாம் ஆற்றும் கைங்கரியங்கள் எல்லாம் மேலான நிலைபெறும் தாயன்புக்கிணை ஏது. திரிகரண சுத்தியோடு அம்பாளின் திருவடிகளை இறுகப் பற்றிக்கொண்டால் நாம் வேண்டுவனவெல்லாம் ஈந்து அருள் புரிவாள். கும்பாபிஷேகம் கண்டு தரிசிப்பது தவம் உடையார்க்கே வாய்ப்புண்டு. பன்னிரண்டு வருடங்கட்குப் பின் மூலமூர்த்தியின் அருட்பிரவாகத்தை மீண்டும் பெருகச் செய்வதே இதன் உட்பொருள். அனுபவம் மிக்க பிரபல சிவாச்சாரியார்கள் நடாத்துகிறார்கள். எனவே ஒரு குறையுமின்றி நிறைவுறும். இதற்குப் பல வகையாலும் தொண்டுகள் புரிந்த அன்பர்களைப் பாராட்டி எல்லோருக்கும் தேவியின் திருவருளை உளமார வேண்டி எமது மனப்பூர்வமான நல்லாசிகளை வழங்குகிறோம்.

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்

கும்பாபிஷேகச் சிறப்பிதழ்வெளியீட்டு அம்பிகையின்
நல்லருளை வேண்டி வணங்குபவர்கள்

தரமான பூட்டுப் பிணையல்கள்

★ விவசாயக் கருவிகள்

○ அன்பளிப்புப் பொருட்கள்

விற்பனையில்

வாடிக்கையாளரின் உள்ளங்கவரும்

# அம்பாள் வணிகம்

நீர்வேலிச் சந்தி,

நீர்வேலி

## அருள்மிகு

# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்

சுழிபுரம் பத்திரகாளி கோவில் பல காரணங்களினால் யாழ்ப்பாணமெங்கும் பிரசித்தி பெற்றிருந்தது. ஆனாலும் திருப்பணிகளும் நிர்வாகமும் சரியாக அமையப் பெறாத நிலையிலிருந்தது. சிற்ப. சித்திர கைத்தொழில் வல்லுனர்களாக இருக்கின்ற அதன் பராபரிப்பாளர்கள் காலத்துக்கேற்றவாறு நிர்வாக சீர்திருத்தங்கள் செய்தும், திருப்பணி வேலைகளை புதிய சிறந்த அழகு நிறைந்த முறையில் அமைத்தும் மகாகும்பாபிஷேகத்தை நிறைவு செய்திருக்கிறார்கள்.

ஆலயத்தைச் சூழ்ந்து வசிக்கின்ற மக்களுக்கும் ஊரவர்களுக்கும் தங்களது நித்திய வாழ்க்கையைப் புனிதப்படுத்திக் கொள்ளவும் திருவருட் பொலிவு பெறவும் மிகச்சிறந்த வழிபாட்டுத்தலமாக இது பிரகாசிக்கிறது.

பலவிதமான சீர்கேடுகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகியிருக்கும் தமிழ் மக்கள் இவைகளையெல்லாம் சகித்துக்கொண்டு தங்களது சமூக, சமய, மொழி கலாச்சார அழிவுகளினின்றும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் ஆத்மபலத்தை வளர்த்துக் கொள்ளவும் இத்தகைய சிறந்த ஆலயங்களையும் அங்கிருந்து பெறப்படும் அருட்பிரவாகத்தையுமே நம்பி இருக்கிறார்கள்.

"வாழ்க அன்னையின் திருவருள்"
"வளர்க அன்பர்களின் ஆத்மபலம்"

பறாளை,
சுழிபுரம்.

சு. ஷண்முகநாதசர்மா
ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவில்

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய
மஹா கும்பாபிஷேகம் சிறப்புற
வாழ்த்துகிறோம்

யாழ் நகரில் உத்தரவுபெற்ற
C.I.C. பெயின்ட் விற்பனையாளர்கள்

நியூ ஸ்ரான்லீஸ்

NEW STANLEYS

க. நடராஜாவும் மைந்தர்களும்
இல. 95/1 அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்

# ஆசிச்செய்தி

புண்ணியஞ் செய்வோர்க்குப் பூவுண்டு நீருண்டு, அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறையீசனை நண்ணறியாமல் நழுவுகின்றாரே - திருமந்திரம்

உலகில் சகல வளங்களையும் நல்கி, சகல அண்ட கோடிகளையும் காத்தருள் நல்கும் ஸ்ரீமாதாவாகிய அன்னை பராசக்தியின் வடிவில் அமைந்த உருவமே ஸ்ரீ பத்திரகாளி, துர்க்கையாகும். தெய்வங்கள் பிரளய காலங்களில் ராக்ஷதர் அசுரர் தொல்லைகள் ஏற்பட்ட காலங்களில் ஈஸ்வரன் தனது சக்தியின் பார்வையைக் கொண்டு வளர்த்த தெய்வங்களே காளி துர்க்கை வடிவங்கள். சிதம்பரக்ஷேத்திற்கு வடக்கே தில்லைக்காளி ஆலயம் உண்டு. சிவன் காளியுடன் நடனம் செய்ததாக புராணங்கள், தலமகாத்மிய மூலம் அறியலாம் எனவே சுழிபுரப்பதியில் பழமைவாய்ந்த ஆலயமாக விளங்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் நித்திய நைமித்திய பூசைகள் உற்சவலங்கள், காமிய வழிபாடாகிய லக்ஷார்ச்சனை என்பனவும் வருட அபிஷேகம் பொங்கல் என்பனவும் மிகவும் விமரிசையாக நடைபெறும் இடமாகும். இத்தகைய பெருமை அருள்நிறைந்த ஆலயத்தை விஸ்வபிரம்மவம்சத்தினர் பராபரித்துவந்த வழமையாகும் தற்போது ஆலயம் புதுக்கி அமைத்து பல சிறந்த அம்சங்களுடன் புதுப்பொலிவு கண்டு உள்ளது. எனவே இவ்வளவு காலநெருக்கடியிலும் அம்பாள் திருவருள் இவ்வைபவத்தை நடத்த திருவருள் கூட்டியுள்ளது போற்றுதற்கரிய காரியமாகும். எனவே இந்த ஆலய கும்பாபிஷேகம் பவ வருஷம் தைமாதம் 27ம் நாள் சுக்கிரவாரம் பூர்வதசமித்திதி மிருகசீரிட நக்ஷத்திரத்தில் மகாகும்பாபிஷேக விழா நடத்த திருவருள் கூட்டி இருக்கிறது தெய்வீக தன்மையே. ஷ்டி விழாவுக்கு மலர் வெளியிடுவது மிகவும் போற்றுதற்கரிய விஷயம். கும்பாபிஷேகம் சிறப்பாக நடக்கவும் கும்பாபிஷேக மலர் வெளியீடு சிறப்பாக அமையவும் அடியார்கள் துயர் அல்லல் நீங்கி சுபீட்சமான, நிறைந்த வாழ்வு, அமைதி, சாந்தம், சமாதானம், ஐக்கியம் உள்ள சமூகமாக சிறப்புற வேண்டுமென எமது மனமார இறைவியின் பொற்பாத மலர்களை வழுத்தி ஆசிகூறிப் பிரார்த்திக்கிறேன்.

**வாழ்க மக்கள் வளர்க ஆலயத்தொண்டும் சமயமும்.**

தெகிவளை நெடுமால் கோயில் பிரதமகுரு
**பிரம்மஸ்ரீ சாமி. விஸ்வநாதக்குருக்கள்**
*பிரதிஷ்டா சிரோமணி, வேதாகமசூடாமணி*
(நவாலியூர்) கொழும்பு

★ ஸ்ரிக்கேஸ் ★ விளம்பரங்கள் ★ புத்தக அட்டைகள்
மற்றும்
சித்திர வேலைகளுக்கும்
பிரசித்திபெற்ற நிறுவனம்

ஞானம் ஆட்ஸ் அன் அட்வடைசிங்ஸ்

'சித்திரபவன்' சங்கானை

ஸ்கிறீன் அச்சுக்கலை நிபுணர்கள்

சிறந்த முறையில் கல்வியை கற்று
கல்வி, அறிவு, ஞானம், பக்தி
உள்ளவர்களாக வாழ்ந்திட
நாடவேண்டிய இடம்.....

பொன்ஸ் கல்லூரி

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை

பலசரக்கு வகைகளுக்கு

ந. த. இராசரத்தினம்

சந்தைச் சதுக்கம்
சங்கானை

உ

# சக்தியின் மகிமை

அகில உலக் நாயகியாக, அன்னை பராசக்தியாக, எங்கள் எல்லோரையும் காக்கும் தெய்வமாக, உயிர்கள் அனைத்தையும் இயக்கும் சக்தியாக விளங்குபவள்தான் பத்திரகாளி அம்பாள் ஆவாள் எங்கள் தாயின் ஆலயம் அழகுவாய்ந்த சிற்ப ஓவியங்களும், கண்ணைப்பறிக்கும் கருங்கற் கோபுரங்களும், பக்திப் பரவசமூட்டும் ஆலய அமைப்புக்களும் ஒருங்கே அமைந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் புனித சக்திபீடமாக சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயம் காட்சியளிக்கின்றது.

சைவ சமயத்தவர்களாகிய நாங்கள் எல்லாம்வல்ல இறைவனை தந்தையாகவும் தாயாகவும், தலைவனாகவும், தோழனாகவும் பக்திசெய்து வழிபடுகின்றோம். இவற்றுள் இறைவனைத் தாயாக வழிபடுகின்றமை சிறந்தது அன்பு, தூய்மை, பொறுமை, தன்னலமின்மை, மன்னிக்கும் சுபாவம் ஆகியவற்றில் சிறந்தவள் தாய். தாயை அணுகக் குழந்தை ஒரு பொழுதும் அஞ்சுவதில்லை. தன்பிள்ளை நல்லது செய்தாலும், தீதே புரிந்தாலும், உயர் நிலை அடைந்தாலும், தாழ்மையுற்றாலும் ஒருதாயின் அன்பு மாறுபடாது. இதனாலேயே, "பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ" என்றும், "தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்" என்றும், "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்றும், "தாயாய் எனக்கு தானெழுந்தருளி" என்றும் "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்றும், "அம்மையே அப்பா ஒப்பிலாமணியே" என்றும் சைவ அடியார்கள் பாடியிருக்கின்றார்கள். இறைவனுடைய திருவருளை தாயாக வழிபடுவதன் மூலம் "சக்தியின் மகிமை" எங்கள் உள்ளங்களில் ஊற்றெடுக்கின்றது.

அன்னை பராசக்தியாகிய பத்திரகாளி அம்பாள் உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள். சூரியசந்திரரின் ஒளியாகவும், மலரின் மணமாகவும், நீரின் தண்மையாகவும் விளங்குபவள் அவளே. மனோபலத்தையும், வாக்கு வன்மையையும் உடல் வலிமையையும் அருளுபவளும் அவளே. இச்சக்தியையே வீரம் தரும் துர்க்கையாகவும், செல்வத்தை தரும் இலட்சுமியாகவும் கல்வியைத்தரும் சரஸ்வதியாகவும் நாங்கள் போற்றி வழிபடுகின்றோம். அன்னை பராசக்தியாகிய பத்திரகாளி அம்பாளுக்கு அம்பிகை, அம்பாள், பவானி, உமை, சாமுண்டி, பகவதி, உருத்திராணி, மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி, காளி, பார்வதி என பற்பல நாமங்களில் போற்றி வழிபாடு செய்து வருகின்றோம்.

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் கும்பாபிஷேக மலரில் அடியேனுடைய இந்தச் சிறப்புரை அமையவேண்டுமென விரும்பிய பத்திரகாளி தாய்க்கும் அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையினருக்கும் சிரம் தாழ்த்தி, கரம்கூப்பி, பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சமையச் சேவையில் —

சொல்லின் செல்வர், தத்துவ ஞானி,
செஞ்சொற் கொண்டல், இசைச்சொல்வாரி, சைவப்பிதா
சைவத்திரு பொன். சாம்பசிவம் ஆசிரியர்
அமைப்பாளர், அகில இலங்கை சைவர் கழகம்

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை

[redacted] [redacted]

அன்பளிப்பு:

# ராம்கரன் புத்தகசாலை

## 4, நவீன சந்தை,

## திருநெல்வேலிச் சந்தி

அன்பளிப்பு:

# தேவி கிறைண்டிங் மில்

## பிரதான வீதி,

## சுழிபுரம்

கிரியாகலாப முக்தாமணி

## சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக்குருக்கள்

வழங்கிய

# ஆசியுரை

அம்பிகை அடியார்களே!

அண்டசராசரங்களையும் அசைவிப்பது ஆதிசக்தி "அவள் தந்த ஆக்கம் இவ்வுலக மெல்லாம்" என்பது தத்துவ உண்மை, அவள் என்பது அந்த ஆதி சக்தியை குறிக்கும். எமது அறிவு ஆற்றல் செல்வம் வீரம் அனைத்தும் அந்த சக்தியிடத்து இருந்து வருபவையே யாகும் இவற்றை மானிடராகிய நாங்கள் திரிகரண சுத்தியோடு தியானித்து அன்பு வழியாக பக்தியை பெறுவோமானால் உண்மையான தாய் தந்தையாக இறைவனே தோற்றமளிப்பாள்.

எமக்கு அன்னையாக சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அமைந்துள்ளாள். இக் கோவிலின் சிறப்பு என்ன வென்றால் ஸ்தல விருட்சமாக ஒரு கிளுவை மரம் இன்றும் இக் கோவிலை அழகு செய்கிறது மேலும் இவ் வாலயத்தில் தென் வீதியில் முன்னம் அம்பாள் இருந்த இடமாக ஒரு ஆதார சிலைக் கல்லொன்றும் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இத்தனை சிறப்பு மிக்க இவ்வாலய கும்பாபிஷேகம் 10-02-95 வெள்ளிக்கிழமை நண்பகல் அன்னையின் அருள் கொண்டு அடியேனால் பிரதம குருவாக தலைமை தாங்கி நடாத்தி வைக்கப்பட்டது. நான் மிகவும் பெருமகிழ்ச்சியடைகின்றேன் இவ்வேளையில் இச் சிவகைங்கரியத்தில் ஈடுபட்டு பெருமுயற்சி செய்த யாவருக்கும் நல்வாழ்வு அம்பாள் நல்குவார் என்ற நல்லாசிகளை கூறி மகிழ்கின்றேன்.

★

சகல விதமான பலசரக்கு வகைகளுக்கு

நாடுங்கள்!

# கிருஷ்ணா பல்பொருள் வாணிபம்

பிரதான வீதி,

சங்கானை.

அன்பளிப்பு

த. நடராசா

வல்லை வீதி,

சங்கானை.

சகல விதமான பிடவை

வகைகளுக்கும்

தனுஷ்!

பிடவை அகம்

பிரதான வீதி,

சங்கானை.

உ

ஓம் சக்தி

# ஆசியுரை

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றும் பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வாயினும் நனி சிறந்ததுவே என்றும் பலவாறாக நாம் அன்னையை போற்றுகின்றோம். உலகத்திலே தாய் முதலில் கண்கண்ட தெய்வம். குழந்தையை பெற்றவள் மட்டும் தான் தாய் என்பதல்ல. தாய்க்குரிய குணாம்சங்கள் பொருந்திய எவருமே தாய் தான். தாய்மை, தன்னலமில்லாமை, பொறுமை, மன்னிக்கும் சுபாவம், தியாகம், அன்பு இவை எந்த இடத்தில் குடி கொண்டிருக்கின்றதோ அங்கு தாய்மை முழுமையோடு விளங்குகின்றது. உலகத் தாயே இவ்வாறான குணங்களோடு விளங்குவாளானால், அகிலசராசரங்களனைத்தையும் ஈன்ற அன்னை பராசக்தியை வர்ணனை செய்ய முடியுமா? அத்தகைய அன்னையை வழிபட நாம் என்ன பாக்கியம் செய்தோம்? நாம் எத்தனை பெரிய தவறுகளை செய்தாலும் யாரும் எம்மை மன்னிக்கா விட்டாலும் அன்னை ஒருத்தியே மன்னிப்பாள் இத்தகு சிறப்பு வாய்ந்த அன்னை பராசக்தியானவள் பல்வேறு திருநாமம் கொண்டு ஆலயங்களில் வீற்றிருக்கின்றாள், அவற்றுள் சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். நாட்டின் பல்வேறு சூழ்நிலைகளுக்கிடையில் இவ்வாலயம் முழுமையாக புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் குடமுழுக்கு நிறையப் பெற்றது. இக்கைங்கரியத்தை செய்தவர்கள் மகா பாக்கியவான்கள். இவ் அரிய செயலை பல்வேறு இன்னல், இடைஞ்சல்களுக்கு மத்தியில் நிறைவேற்றி ஒரு மகத்தான சாதனையை இவ்வாலய அறங்காவலர்கள் செய்துள்ளனர். இப்பணியை செய்தவர்கள், செய்வித்தவர்களும் மற்றும் பல்வேறு வழிகளில் ஆதரவும் உதவியும் வழங்கியோருக்கும் அடியார்களுக்கும் அன்னையின் பரிபூரணமான திருவருள் கிடைக்க வேண்டுமென மனதார வேண்டி ஆசி கூறி அமைகிறேன்.

"சர்வே ஜநா சுகிநோ பவந்து"

**பிரம்மஸ்ரீ சி. வ. இராஜேஸ்வரக்குருக்கள்**
பண்ணாகம் விசவத்தனை,
ஸ்ரீ முருகமூர்த்தி கோவில்

அன்பளிப்பு:

# வேலழகன்
# இரும்புக் களஞ்சியம்

காங்கேசன் துறை வீதி,

சுன்னாகம்.

உ

# அகில இலங்கை கம்பன் கழகத்தின்

# ஆசியுரை

அண்டசராசலங்கள் அனைத்திலும் வாழும் உயிர்களுக்குத் தாயானவள் அன்னை பராசக்தி. தீச்சுடருள் வெம்மைபோல் சிவத்தோடு கலந்தவள். கல்லினுள் தேரைக்கும், கருப்பை உயிர்க்கும் உணவூட்டும் பெருங்கருணைப் பெருமாட்டி. ஆணவப் பிடிப்பிலிருந்து ஆன்மாக்களை விடுவிக்க மாயா சக்தியாகவும், விடுவிக்கப்பட்ட ஆன்மாக்களை இறைவனுடன் சேர்க்க சிவசக்தியாகவும் நின்று தன் பெருங்கருணைத் திறத்தால் பேரருள் செய்பவள். சரஸ்வதியாயும் இலஷ்மியாயும், உமாதேவியாயும் முத்தொழிலைப் புரியும் மும்மூர்த்திகளுக்குத் துணை நிற்பவள். தத்துவங்கடந்த பரமசிவத்தை ஆன்மாக்களுக்காக தத்துவங்களுக்கு உட்படுத்தி இரங்கவும் இறங்கவும் செய்யும் அன்னை. அவள் உலகின் தீமைகளையழிக்கப் பத்திரகாளியாய் உருக்கொள்கிறாள். அத்தகைய பெரும் சக்தியை தாமர விக்கிரகத்தில் ஆரோகணிக்கச் செய்து கும்பாபிஷேக, மண்டலாபிஷேகங்களைக் கண்ட சுழிபுரம் வாழ் பெருமக்கள் பாக்கியவான்கள். முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளை, எண்ணி, சென்னி தாழ்த்தி இறைஞ்சுவோம்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

இ. ஜெயராஜ்
அமைப்பாளர், கம்பன் கழகம்

கும்பாபிஷேகம் காணும் சுழிபுரம் பத்திரகாளி அம்பாளின்

அருளை வேண்டி நிற்பவர்

# லிங்கம் வர்த்தக நிலையம்

78, சந்தோசம் தெரு,

யாழ்ப்பாணம்

சுழிபுரம் – பறாளாய்

ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தின்

# வாழ்த்துரை

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட சுழிபுரம் என்னும் சோழியபுரப்பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் நீண்டகாலமாக எதிர் பார்க்கப்பட்ட மகா சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேக வைபவம் நாட்டு நிலைமை காரணமாக இழுபட்டு வந்ததையிட்டு சைவப் பெருமக்கள் மனங்கலங்கியிருந்த வேளை, அம்பாள் தனது அருளைக் கொடுத்து மேற்படி ஆலய பரிபாலன சபையினரின் விடாமுயற்சியால் யாவற்றையும் கைகூட்டி அடியார்கள் ஆச்சரியப்படும் வகையில் திருப் பணி வேலைகள் நிறைவு பெற்றது.

இன்று வெள்ளி (10-02-1995) மகாகும்பாபிஷேகம் மிகச்சிறப் பாக நிறைவுபெற்று பூரண பொலிவுடன் விளங்கும் அன்னையின் அருளை எல்லோரும் பெற்றுய்ய வேண்டி வணங்குகின்றோம்.

அம்பாளின் திருக்கரத்தில் இருக்கும் மலர் போல இச் செய் தியைத் தாங்கிவரும் இம் மலரும் என்றும் வாடா மலராய் அடியார் களின் மனங்களை மலரவைக்கும் என்ற உறுதி எமக்குண்டு.

அன்னையின் கும்பாபிஷேக காலம் நாட்டில் அமைதி, சமா தானம் அரும்பிய காலமாதலால் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருளை அடியேன் கூறவும் வேண்டுமா?

''மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்''

*சோழியூரான்*
*பிறைசூடிக்குரு*
சந்நதிப்பூசகரும், ஓய்வுபெற்ற ஆசிரியரும்

★ துவிச்சக்கர வண்டி உதிரிப் பாகங்களுக்கும்

★ மரக்கறி வகைகளுக்கும்

★ பழ வகைகளுக்கும்

## நா. க. சிவப்பிரகாசம்

**பிரதான வீதி, சங்கானை**

---

அன்பளிப்பு

## புவிதரன்

**பல்பொருள் வாணிபம்**

*பிரதான வீதி,*

*சங்கானை*

---

*பலசரக்குச் சாமான்களை*
*நியாயமான விலையில்*
*பெற்றுக்கொள்ள*
*சிறந்த இடம்*

## கிருஸ்ணா

**வர்த்தக நிலையம்**

*சந்தை சதுக்கம்,*

*சுளிபுரம்*

*உரிமையாளர்:* பொன். சிவநேசன்

# அருள் தன்மை நிறைந்தது அம்பாளின் ஆலய மண்

முதல் முறையாக சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் மகா கும்பாபிஷேகம் 10-02-95 வெள்ளிக்கிழமை நண்பகல் ஆயிரக்கணக்கான அடியார்கள் முன்னிலையில் மிகச்சிறப்பாக நிறைவு பெற்ற காட்சியை நாமும் கண்களால் கண்டு இன்புற்று அருள் பெற்றோம்.

பல்வகையான கஷ்டங்கள் மத்தியில் அம்பாளின் கட்டிட வேலைகள், மற்றும் புதிய திருப்பணிகள், கும்பாபிஷேக கருமங்கள் யாவும் நிறைவு பெற்றது. அம்பாளின் அருட்கடாட்சம் ஆலய சபையினருக்கு கிடைத்தமையே காரணமாகும்.

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தியாகிய பின்னர் கோவில் ஓர் புதுப் பொலிவோடு திகழவுள்ளன. அம்பாளை நம்பி வந்து தொழும் அடியார்கள் வேண்டுவதை எல்லாம் பெற்று மன மகிழ்வுடன் செல்வதையும். மேலும் தங்கள் தங்கள் நேர்த்தியை நிறைவு ஆக்குவதும் ஓர் கண் கொள்ளாக் காட்சியாகும்.

1994ம் ஆண்டு நடைபெற்ற வருடாந்தப் பொங்கல் விளக்கேற்று விழாவில் ஆலய பரிபாலன சபையினர் 1995ம ஆண்டு நடைபெறும் பொங்கல் விழா ஆலய கும்பாபிஷேகத்துடன் நடைபெறும் என்று தெரிவித்தனர். நாட்டு நிலமையை நன்கு புரிந்த எம் போன்றோர் எவ்வாறு கும்பாபிஷேகத்தை நிறைவு செய்யப் போகின்றார்கள் என்று அஞ்சினோம்.

அம்பாளின் ஆலய பரிபாலன சபையார் பணிக்கு அம்பாள் உறுதுணையாக இருந்து சகல கருமங்களையும் நிறைவாக்கியுள்ளார். சீமெந்து கிடைத்தது. மக்களின் அன்பளிப்புக்கள் கிடைத்தன, சபையாரின் செயற்பாடு மிகவும் துரிதமாகச் செயற்பட்டது, எல்லாம் நிறைவு பெற்றுள்ளன. நாம் யாவரும் பெரும் பாக்கியசாலிகளே. அம்பாள் புதுப் பொலிவோடு மீண்டும் தனது இருப்பிடத்தை சென்றடைந்து தமது பக்தர்களுக்கு அருள் காட்சியை வழங்கிக் கொண்டே இருக்கின்றார். அம்பாளின் ஆலயத்தில் நாம் பக்தியோடு பாடுவோம், பஜனை செய்வோம், அமைதியாக வணங்கி ஆறுதல் பெற்று இன்புறுகின்றோம். அம்பாளின் ஆலய மண்ணில் தங்கி மகிழ்ச்சியடைகின்றோம் எமது மகிழ்ச்சிக்கு ஆறுதல் தந்த சபையாருக்கு என்றும் நன்றியுடையோம்.

சுழிபுரம் பத்திரகாளி அம்பாளின் ஆலயம் அமைந்துள்ள மண் யாவும் அருள் தன்மை நிறைந்தவை என்பதை முன்பு வெளியாகிய சில வெளியீடுகளில் நாம் யாவருக்கும் சுட்டிக் காண்பித்ததை மீண்டும் நினைவு கொள்கின்றோம். ஆம் அம்பாளின் மண் அருள் தன்மை நிறைந்தவை இது உண்மை. யாதுமாகி அருள் சுரப்பவள் காளி அம்பாள் எங்கும் நிறைந்தவள் காளி அம்பாள் அம்பாளின் அருள் மண்ணில் கால் வைத்து அருள் பெறுவோம் கும்பாபிஷேக நினைவாக வெளியிடப்படும் மலரில் எங்கள் பஜனைச் சபையாரின் வாழ்த்தை தெரிவித்து இன்புறுகின்றோம். வணக்கம்.

கி. வாமதேவன்
கௌரவ செயலாளர்
பஜனைச் சபை

அன்பளிப்பு

**CHANKANAI PHARMACY**

# சங்கானை மருந்தகம்

பிரதான வீதி ★ சங்கானை

*ஆண்களின் ஆடைகள்*
*அதி நவீன முறையில்*
*தைத்துக்கொடுப்பவர்கள்*

## சாரா
## தையல் அகம்

பிரதான வீதி
சங்கானை

உரிமையாளர்: இ. ராம்குமார்

அன்பளிப்பு



## தவம் மிதிவண்டி
## தொழிலகம்

பிரதான சாலை, சுழிபுரம்

உ

# தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபையின்

# ஆசியுரை

எங்கள் ஆயிரங்கண்ணுடைய தேவி வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு மிக அருகே உள்ளதுதான் சுழிபுரம் அருள்மிகு பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் அவ்வாலயத்தினர் வெளியிடும் கும்பாபிஷேக மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நாம் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றோம்.

இந்த நெருக்கடி மிக்க காலகட்டத்தில் எந்த இடர்ப்பாடுகளையும் பொருட்படுத்தாது ஆலயத்தை அழகுற புனரமைத்து கும்பாபிஷேகம் செய்த பரிபாலன சபையினரை நாம் மனதார பாராட்டுகின்றோம். இச்சிறந்த தொண்டை அவர்களின் சாதனை என்றால் மிகையாகாது. இரவுபகலாக உழைத்து தங்களையே ஆலய புனரமைப்பிற்கு அர்ப்பணித்த ஆலய பரிபாலசபையினரில் ஆசிரியர் திரு கு. பொன்னுத்துரையை குறிப்பிடுவதில் எவ்வித குற்றமும் இல்லையெனக் கருதுகிறோம்.

இரு ஆலயங்களையும் தரிசிக்கும் எவரும் இரண்டின் தோற்றப்பொலிவில் உள்ள ஒற்றுமையை நிச்சயமாக அவதானிப்பர். இவ்விரு ஆலயங்களும் அழகுற அமைவதற்கு வேண்டிய ஆலோசனையை வழங்கியவர் இப்போது அவுஸ்ரேலியாவில் வாழும் இளைப்பாறிய பொறியியலாளர் திரு. நடேசன் ஆவர் பத்திரகாளி அம்மன் ஆலய வேலைகள் பூர்த்தியெய்திய பின் அவ்வாலயத்தை தரிசிக்கும் எவரும் தாம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு வந்துவிட்டோமோ என்று திகைப்பர் எனவே விரைவில் முழு வேலையும் பூர்த்தியாக பத்திரகாளி அம்மனின் அருளும் அடியார்களின் ஆதரவும் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

இவ்வாலயங்கள் இரண்டிற்குமிடையில் நெருங்கிய உறவு இருந்து வருவதை நாம் பெருமையுடன் குறிப்பிடுகின்றோம். வழக்கம்பரை அம்மன் உற்சவ காலங்களில் தேவையேற்படும் போதெல்லாம் பத்திரகாளி அம்மனின் சகடையை தாராளமாகப் பாவித்து வந்திருக்கின்றோம். இச்சந்தர்ப்பத்தில் பத்திரகாளி அம்மன் பரிபாலன சபையின் பெருந்தன்மையை நாம் நன்றியுடன் பாராட்டுகின்றோம். மேலும் பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பரிபாலனசபையின் முக்கிய உப செயலர் திரு. மகேந்திரன் அவர்கள் வழக்கம்பரை அம்மன் ஆலயத் திருப்பணி வேலைகளை முழுமனதுடன் செய்வதைக் குறிப்பிடவும் விரும்புகிறோம்.

வழக்கம்பரை முத்துமாரியம்மனுக்கு பக்கபலமாக விளங்கும் சுழிபுரம் பத்திரகாளி அம்மன் தன்னை வணங்கும் அடியார்களுக்கு பூரண அருளை வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

**சி. ஞானச்சந்திரமூர்த்தி**
பொருளாளர்
தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன்
தேவஸ்தானம்

*அன்பளிப்பு*

பலசரக்கு வகைகளுக்கு

நாடுங்கள்

# நல்லதம்பி காசிப்பிள்ளை

சந்தை சதுக்கப்

சங்கானை



கிரியா மண்டபத்தின் முன்புறத் தோற்றம்



ஆலயத்தின் இருபுறத் தோற்றங்கள்

தரமான சிற்றுண்டி வகைகளுக்கு
புகழ்பெற்ற இடம்

# கண்ணன் உணவகம்

**6, பல்கலைக் கழகச் சந்தி,**

**திருநெல்வேலி**

உ
சிவமயம்

# ஆலய வழிபாடும் நாமும் - சில சிந்தனைகள்

— சைவப்புலவர் சு. செல்லத்துரை

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனுக்கு ஆலயம் அமைத்து அங்கு பெருமானை எழுந்தருளச் செய்து பூசை வழிபாடு செய்து உய்திபெறும் வாய்ப்புப் பெற்றவர்கள் நாம். ஆனால் அந்த வாய்ப்பை எந்தளவுக்குப் பயன்படுத்துகின்றோம் என்பதைச் சிந்திக்க வேண்டியது எமது கடமையாகும்.

ஆலய அமைப்பு முறைகள், ஆலயக் கிரியை முறைகள் ஆலயவழிபாட்டு முறைகள், என்பவற்றையெல்லாம் இறையருள் பெற்ற ஞானிகள் ஆகமங்களாக வகுத்துத் தந்துள்ளார்கள்;

ஆ – ஆன்மா, லயம் - ஒன்றித்தல், ஆன்மா இறைவனுடன் ஒன்றிக்கும் இடமே ஆலயம் ஆகும். ஆகவே ஆலயத்தில் நடைபெறும் எந்தக்கருமமும் மனம் இறைவனிடம் ஒன்றிப்பதற்கு, லயமாவதற்கு வாய்ப்பாகவே வகுக்கப்பட்டுள்ளன.

சூரிய ஒளியில் நெருப்பு உண்டு குவிவு வில்லையை அளவான தூரத்தில் பிடித்தால் அதில்படும் சூரிய ஒளிக்கதிர்கள் குவிவடைந்து, அதன்கீழே வைக்கப்படும் பஞ்சு அல்லது அதற்கொப்பான பொருளில் நெருப்பு உண்டாகக் காணலாம். நேரே சூரிய ஒளியிலிருந்து நெருப்பு உண்டாவதில்லை; குவிவுவில்லையின் பயன்பாட்டைப் பொறுத்துத்தான் நெருப்பு உண்டாகும்.

அதுபோல ஆலயம் அமைத்துவிட்டால், ஆலயத்துக்குப் போய்வந்தால் இறைவன் அருள்கிடைக்கும் என நினைப்பது பொருந்தாது. குவிவுவில்லையில் சூரிய ஒளி குவிவடைவது போல எமது மனம் இறைவனிடம் குவிவடைதல் வேண்டும். அதற்குக்காரணமாக பூசைகள், விழாக்களும் ஆசார அனுட்டானங்களும் அமைத்தல் வேண்டும்.

ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனிடம் எமது மனம் குவிவடைவதற்கு ஏற்றவகையில் தான் எல்லாக்கருமங்களும் நடைபெற வேண்டும். எந்தஒரு கருமமும் வழிபாட்டிற்கு இடையூறாக இருக்கக்கூடாது

ஆலயத்துக்குப் போக நினைத்த நேரம்முதல், ஆடை அலம்பும் போதும், குளிக்கும் போதும், பத்திரபுஷ்பம் எடுக்கும் போதும், பூசை, அர்ச்சனைத் திரவியங்கள் சேகரிக்கும் போதும், ஆலயத்துக்குப்போகும் போதும், வழிபடும் போதும் மனம் இறை சிந்தனையில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். உடல் அதற்குபகாரமாக செயற்பட வேண்டும்.

தூய்மையான வில்லையில் சூரியஒளி குவிவடைந்து நெருப்பை உண்டாக்குவது போலத் தூய்மையான உடலும் உள்ளமும் கொண்டு வழிபடும் போதுதான் இறையருள் சித்திக்கும்

இதற்கிடையூறாகவுள்ள அனைத்துச் செயற்பாடுகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

சிவசித்தனையைச் சிதைக்கவல்ல பேச்சுக்கள், கதைகள், பாடல்கள், வேடிக்கைகள், திருவிழாக்களைத் தெருவிழாக்களாக்கிக் குளிக்கப் போய்ச் சேறு பூசிய நிலையை ஏற்படுத்திவிடும். வேடிக்கைகளாக்களை வேறிடங்களில் வைக்கலாமே.

பூசை விழாக்களைக் குறிப்பிட்ட நியம நேரம் தவறாமல் பயபக்தியுடன் செய்வதும், பூசை முடிவடைந்த பசுமையோடு பூசகர் வழிபடுவோர்க்கு அருளுரை வழங்குவதும், விழாக் காலங்களில் சமய தீட்சை வைத்து வழிபடுவோரை ஆசார அனுட்டானங்களில் ஈடுபடுத்துவதும், ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்குரிய தோத்திரங்கள், புராணம், நற்சிந்தனைகள் வழிபாட்டு முறைகளுக்கு முன்னுரிமை கொடுத்தலும் "ஆலயத்தில் அனைத்தும் சாதனைக்குரியனவே" என்னும் கொள்கையுடன் செயற்படுவதும் இன்றைய காலத்தின் தேவைகள் ஆகும்.

இதனை ஆலயக் குருமாரும், பரிபாலன சபையினரும் வழிபடுவோரும் சிந்தித்துச் செயற்பட்டுச் சைவச் செந்நெறியைப் போற்றுவோமாக.


அன்பளிப்பு:

ராஜன் துவிச்சக்கரவண்டி
தொழிற்சாலை

பிரதான சாலை, — சுழிபுரம்

**அன்பளிப்பு:**

**ராஜா றைகிளீனேஸ்**

பிரதான வீதி,

சுழிபுரம்,

சூடான சிற்றுண்டி
வகைகளுக்கு,
இன்றே நாடுங்கள்

**பாமினி கபே**

பிரதான வீதி,

சுழிபுரம்.

ஆ. தருமராசா

பாதணிகள், சிற்கவர்
வகைகள் மற்றும் தோல்
பொருள் வேலைகளுக்கு

**இந்திரன்**

**பாதணி அகம்**

பிரதான வீதி,

சங்கானை.

பலசரக்கு வகைகளுக்கும்
பழவகைப் பொருட்களுக்கும்

**நாகலிங்கம்**

**வாணிபம்**

பிரதான வீதி,

சங்கானை.

உ

# அன்னே உலகுக்குப் பத்திரகாளி என்னும் அருமருந்தே

**பண்டிதை பொன். பாக்கியர், சுழிபுரம்**

*பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க*
*முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கு*
*மன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே*
*யென்னே யினியுன்னை யான்மறவா மனின் றேத்துவனே,*

இஃது அம்பாளின் அருளைப் பெற்ற அபிராமிப் பட்டரின் நெஞ்சநெக்குருகி எழுந்த அருட்பாடலாகும். அன்னை அபிராமி உலகைப் படைத்துக் காத்து அளித்து அருட்பரிபாலனம் செய்து கொண்டு வருகின்றாள். இதனையே புரட்சிக் கவிஞர் பாரதியாரும் 'நம்பினோர் கெடுவதில்லை இது நான்குமறைத் தீர்ப்பு. அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்' என்று கூறிவைத்துள்ளார்.

அன்னை பராசக்தி எந்தவடிவத்தைத் தாங்கி வந்தாலும் அது அன்னையின் அருளாட்சிக்கு ஏற்றவடிவமென்றே நாம கொள்ளவேண்டும். 'எந்திறம் நிற்பான் ஈசன் அந்திறம் அவனும் நிற்பான்' என்கின்றது சைவசித்தாந்தம்.

துர்க்கை என்பவள் வீரத்துக்குரிய தெய்வமாவாள். அவளுக்குரிய மற்றொரு பெயர் கொற்றவை என்பதாகும். கொற்றம் என்றால் வெற்றி என்பது பொருள். வெற்றியைத் தரும் தெய்வம் கொற்றவை. பண்டைக்காலத்து முடியுடைமூவேந்தரும் ஏனைய மன்னரும் போர்க்களம் புகுவதன் முன்னர் கொற்றவைக்கு அதாவது துர்க்கா தேவிக்கு விழா எடுத்தே செல்வர். இந்த மரபின்படி நல்லூர் இராசதானியாக இருந்த வேளையில் கட்டப்பட்டது. நல்லூரில் அமைந்துள்ள வீரமாகாளி அம்பாள் ஆலயம். துர்க்காதேவியைக் காளிதேவி என்றும், பத்திரகாளி அம்பாள் என்றும் அழைக்கும் ஒரு மரபினையும் நாம் காணுகின்றோம். திருகோணமலையில் நரத்துக் காளிகோவிலென்றும் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியிலும், சுழிபுரத்திலும் பத்திரகாளி அம்பாள் என்றும் இவ்வெற்றித்தாய் அழைக்கப்படுகின்றாள்.

இங்கே சுழிபுரத்திலுள்ள கொற்றவையாகிய பத்திரகாளியம்பாளின் அருட் பிரவாகத்தை நாம எடுத்து நோக்குவோம். ஆதிமூலத்தில் இருக்கும அம்பாளின் அருள் மிகு சொரூபத்தைக் கண்டாலே அருள் கிடைக்கும அவளை நாடோறும் இடையறாது வழிபட்டால் கிடைத்தற்கரியன யாவும் கிடைக்கும. இப்பொழுது எங்கள் பத்திரகாளி அம்பாளின் அடியவர்கள் அன்னையின கோவிலைப பெருப்பித்துக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்துள்ளனர். எங்கள் கிராமமக்கள் மாத்திரமன்றி இக்குடாநாட்டின் பல பகுதி மக்களும் அருள்மிகு சுழிபுரம பத்திரகாளி அம்மன் கோவிலுக்கு வந்து பொங்கல் படையல் செய்வதை நாம் காணுகின்றோம்.

நாம் இளம் பிள்ளைகளாக இருக்கும் காலத்தில் இக்கோவிலில் ஆட்டுக்கடா வெட்டுதல், அம்பாளுக்கு மாமிச உணவுவகைகள் அவித்துப் படைத்தல் முதலிய காரியங்கள் நடைபெற்றதுண்டு ஆனால் இற்றைக்குப் பல்லாண்டுகளின் முன்பே கோவிற் பரிபாலகர்களாலும் அம்பாளின் அடியவர்களினாலும் இம்முறை மாற்றப்பட்டுவிட்டது. இப்பொழுது ஆகம விதிப்படி கோவிற் கிரியைகள் யாவும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

பங்குனி மாதத்தில் நடைபெறும் திருவிழாவின் முதல் நாளை விளக்கு வைக்கும் நாளென்று அழைப்பர். அந்நாளில் அம்பாளிடம் விடைபெற்ற பின்னரே அடியார்கள் தம் இருப்பிடம் செல்வார்கள் விடைபெறுதல் என்னும் பண்டைய மரபை இன்றும் பேணுகின்ற ஒரு அம்மன் ஆலயமாக எங்கள் ஆலயம் விளங்குவது பெருமை தரக்கூடியதொரு விடயமாகும். இவ்வாலயத்தின் தர்மகர்த்தாசபை பல இறுக்கமான கட்டுப்பாடுகளை அமைத்து ஆலயத்தைப் பேணிவருவது நாமறிந்தது. பத்திரகாளி அம்பாளின் அடியவர்கள் பொன்னும் பொருளும் கொடுத்து அவள் ஆலயத்தைப் பொலிவு பெறச் செய்து கும்பாபிஷேக விழாவினையும் கண்டுள்ளனர். அன்னை இருப்பிடம் சேர்ந்ததும் எம் இன்னல்கள் தீர்ந்தன என அடியவர் கூறி ஆனந்தம் அடைகின்றனர். 'அன்னையுலகுக்குப் பத்திரகாளியென்னும் அருமருந்தே' என அடியவர்கள் போற்றித் துதிக்கின்றனர்.

**அன்னையின் அருள் அலை எங்கும் பிரவாகித்து நம் அல்லலெல்லாம் அறுத்து அமைதியைத் தருவதாக.**


அன்பளிப்பு

# கிருஷ்ணா பழ வாணிபம்

பிரதான வீதி, சுழிபுரம்

# பத்திரகாளி வழிபாடு - ஓர் அறிமுகம்

— மா. வேதநாதன், எம். ஏ.
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*இந்து நாகரிகத் துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்*

## முன்னுரை

உலகில் தோன்றி வளர்ந்துள்ள புராதன வழிபாட்டு முறைகளுள் சக்திவழிபாடும் ஒன்றாகும். இந்துசமயத்திலிடம் பெறும் அறுவகை வழிபாட்டு முறைகளுள் சக்தியை முழுமுதற் தெய்வமாகக் கொண்ட சமயம் சாக்தம் எனப்படும். இச்சமய நெறியினைப் பின்பற்றுவோரைச் சாக்தர்கள் என அழைப்பர். தொன்மைக் காலத்தில் தோன்றிய இச்சாக்த நெறியானது இன்றுவரை வளர்ந்து வருவது அதன் சிறப்பம்சமாகும். இச்சாக்த நெறியானது பொதுமக்களிடையே அன்னை வழிபாடு, அம்மன் வழிபாடு, அம்மை வழிபாடு, ஈஸ்வரி வழிபாடு, நாகமாதா வழிபாடு எனப் பல பெயர்களில் வழங்கப்படுகின்றது. அகிலாண்டேஸ்வரியாக விளங்கும் சக்தியை காளி, பத்திரகாளி, துர்க்கை, புவனேஸ்வரி, மனோன்மணி, வராஹி, நாகபூஷணி ஆகிய பெயர்களாலும் வணங்கும் வழக்கம் இந்தியாவிலும் ஈழத்திலும் காணப்படுகின்றது. இச்சக்திக்குரிய நாமரூபங்களுள் காளி வழிபாட்டிற்குரிய சிறப்பம்சங்களை ஈண்டு நோக்குவோம்.

## காளி என்ற சொல்

காளி என்ற சொல்லுக்கு கருப்புநிறமுடைய தேவி என்பது பொருளாகும். கோடானகோடி கற்பங்கள் அடங்கப்பெற்ற காலத்தை அவள் எடுத்து விழுங்கி தன்னகத்தில் அடங்கியுள்ளதால் வடமொழியில் 'காலீ' என்றும், 'காலிகா' என்றும் அழைக்கப்படுகின்றாள். 'காலீ' என்பதே தென்மொழியில் 'காளி' என்றாகி விட்டது எனலாம். காளி எல்லாத் திக்குகளிலும் நீக்கமற நிறைந்திருப்பதால் அவளைத் 'திகம்பரி' எனவும் நூல்கள் குறிப்பிடுகின்றன. சக்தி கால சொரூபிணியாக கருதப்படும் பொழுது காளியாக அமைகின்றாள்.

## காளியின் மறு பெயர்கள்

காளிக்குரிய மறுபெயர்களாக சூரி, மாலினி, எண்டோளி, சூலி, சண்டிகை, தேவி, வீரி, மாதரி, கங்காளி, வேதாளி, உமை, மாதங்கி, தாருகற் செற்றதையல், பைரவி, சிவை, சாமுண்டி, ஆரணி, வல்லணங்கு, ஐயை, யாமளை, முக்கண்ணி என்பனவற்றைச் சூடாமணிநிகண்டு குறிப்பிடுகின்றது. மாகாளியின் பெயர்களாக குமரி, சண்டிகை, குண்டலி, நீலி, வலவை பைரவி, கௌமாரி, மாதரி, மாயை, வீரி, மாதங்கி, யாமளை, சூரி, வேதாளி, கங்காளி, யோகினி, சூலி, சாமுண்டி, தாரகாரி, ஆரியை, தேவி, வல்லணங்கு, ஐயை, அலகைக்கொடியாள், மாலினி, முக்கண்ணி, பதுமை, எண்டோளி, பத்திரி, ஆரணி, யாளியூர்தி என்ற முப்பத்தொன்று பெயர்களைக் கூறுகின்றது பிங்கலம். மாகாளியின் ஊர்தி சிங்கமென்றும், கொடி அலகையென்றும், படைசூலமென்றும் பிங்கல முனிவர் கூறுவது குறிப்பிடற்பாலதாகும். சூலி, எண்

டோளி, தாருகவிநாசனி, மாதரி, வீரி, கௌரி, முக்கண்ணி, பைரவி, குமாரி, சாமுண்டி, சண்டிகை, யோகினி, வேதாளி, யாமளை, மாகாளி என்று காளியின் பெயர்களாகப் பதினான்கு பெயர்களைக் கூறுகின்றது திவாகரம்.

## விஸ்வகர்மாவும் காளி வழிபாடும்

மகாமயன் எனப்படும் விஸ்வகர்மாவின் ஐந்து முகங்களிலிருந்து தோன்றிய மனு, மயன், துவஷ்டா, சிற்பி, ஈஸ்வக்ன என்ற ஐவரும் முறையே இரும்பு வேலை செய்வோர், மரவேலை புரிவோர், உலோக வேலையாற்றுவோர், கற்றொழில் செய்வோர், நகைத்தொழில் செய்வோர் என்ற குலங்களாக விளங்கினார்கள். இவர்களைப் பஞ்சகம்மாளர் எனவும் கண்ணாளர் எனவும் அழைப்பர், பழந்தமிழ் நூல்கள் கூறும் 'கண்ணுள் வினைஞர்' என்பதும் இவர்களையே குறிக்கலாம். ஆரம்பத்தில் பஞ்சகம்மாளரின் குலதெய்வமாக விளங்கிய காளி வழிபாடானது. பிற்காலத்தில் இந்துக்கள் அனைவரையும் இணைக்கும் அன்னை வழிபாடாக விளங்கிவருகின்றது.

## இலக்கியங்களில் காளி

காளி வழிபாடு பற்றி அறிந்துகொள்வதற்கு வடமொழி இலக்கியங்களும், தமிழ்மொழி இலக்கியங்களும் பெரிதும் துணைபுரிகின்றன இருக்கு வேதத்தின் இராத்திரி சூக்தத்தில் இராத்திரி என்ற பெண்தெய்வம் பற்றிய குறிப்புண்டு. இதில் கூறப்பட்டுள்ள இராத்திரி தேவியே காளி வழிபாட்டின் தொன்மைக்குச் சான்றென அறிஞர் கருதுகின்றனர். இரவுதாய்' என்ற குறிப்பு அதர்வ வேதத்திலும் காணப்படுவது குறிப்பிடற்பாலதாகும். இவ்வகையில் இராத்திரி தேவியை காளிதேவியுடன் தொடர்புபடுத்தி நோக்குவது பொருத்தமாக உள்ளதெனலாம். காளி என்றபதம் முதன்முதலாக முண்டக உபநிடதத்தில் இடம் பெற்றுள்ளது. முண்டக உபநிடதத்தில் யாகக்கினியின் நாக்குகளாகக் கூறப்பட்டுள்ள காளி, கராளி, மனோக்வா, சுலோகிதா, ஸுதூம்ரவர்ணா, ஸ்புலிங்கினி, விஸ்வருசி என்ற ஏழு பெயர்களும் சக்தியின் நாமங்களாக விளங்குவது குறிப்பிடற்பாலதாகும். காளி தேவியின் வழிபாட்டினால் ஒருவன் உலகத்திற்குத் தலைவனாகவும், லக்ஷ்மீபதியாகவும் எல்லாவேதங்களை அறிந்தவனாகவும், எல்லோருக்கும் குருவாகவும், எல்லோராலும் வணங்கப்படுகின்றவனாகவும், எல்லாத்தீர்த்தங்களிலும் மூழ்கியபயன் பெற்றவனாகவும், எல்லாயாகங்களையும் செய்த தீட்சிதனாகவும், இறுதியில் அவன் சதாசிவரூபமாகவும் விளங்குவான் என்று காளிகோபநிடதம் குறிப்பிடுகின்றது. காளி பற்றிய குறிப்புகள் மகாபாரதத்திலும் காணப்படுகின்றன. புராணங்கள் காளியின் பலவேறு தோற்றப் பொலிவுகளையும், சிறப்புக்களையும் குறிப்பிடுகின்றன; மார்க்கண்டேய புராணம், விஷ்ணுதர்மோத்திர புராணம், பவிஷ்ய புராணம் ஆகிய புராணங்களில் காளி வழிபாடுபற்றிய விபரங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சக்தியானவள் காளி என்றும் காளிகா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளாள். காளியின் தோற்ற மூலத்தினை தேவீமஹாத்மியத்தில் கண்டுகொள்ள முடிகின்றது. விஷ்ணுதர்மோத்திரபுராணத்தில் பத்திரகாளியின் அழகும் சிறப்பும் கூறப்பட்டுள்ளது. கபுராணாகமத்தில் பத்திரகாளி, மகாகாளி பற்றிய குறிப்புகள் உள்ளன. தந்திரசாஸ்திரங்கள் காளிவழிபாட்டிற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளன. குலார்ணவதந்திரம், கந்தர்வதந்திரம், ஸ்ரீசக்திசங்கமதந்திரம், யோகினிதந்திரம், காமதேனுதந்திரம், ஸ்ரீ காளிகாகமம் முதலிய சாக்த நூல்கள் காளி வழிபாடுபற்றியும், காளி பேதங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றன. காளியே கைவல்யத்தைத் தரக்கூடியவள் என்று சிவபெருமான் கூறியதாக காமதேனு தந்திரம் குறிப்பிடுகின்றது. யோகினி தந்திரம் உலகமாதா மகா காளியே என்கிறது. மாத்ருகாபேதந்திரம் வேதத்தின் தாயார் எனப்படும் சாவித்திரிதேவி காளியின் வியர்வையிலிருந்து தோன்றினாள் எனக் குறிப்பிடு

கின்றது. மந்திரமகார்ணவம், மந்திரமகோததி, மந்திரரத்னாகரம் என்னும் நூல்களில் காளி வழிபாட்டிற்குரிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. சிற்பநூல்கள் காளிவடிவங்கள் பற்றிய விபரங்களைத் தருகின்றன. குமாரசம்பவம், ரகுவம்சம் முதலிய நூல்களிலும் காளி பற்றிய செய்திகள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் 'கானகம் உகந்தகாளி', 'உயிர்வி உன்னும் உயர் சண்டிகாளி' என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. காளிபற்றிய செய்திகள் தேவாரங்களிலும் இடம் பெற்றுள்ளன. காளி அம்பர்மாகாளம் என்ற திருப்பதியில் இறைவனை வழிபட்டதாக தேவாரம் கூறுகின்றது. காளியினைப் பெயராகக் கொண்டு இயங்கும் மாகாளம் என்னும் பெயர்பெற்ற திருக்கோயில் மூன்று உண்டு. அரிசலாற்றங்கரையில் உள்ள அம்பர் மாகாளம் ஒன்று இதனை 'மல்குதண் துறை அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்' என்று ஞானசம்பந்தர் கூறுகிறார். தொண்டைநாட்டிலுள்ள இரும்பை மாகாளம் மற்றொன்று. 'எண்திசையும் புகழ்போய் விளங்கும் இரும்பை தன்னுள் வண்டுகீதம் முரல் பொழில்கலாய் நின்ற மாகாளமே' என்ற தேவாரத்திருப்பாடல் விளங்கும். உஞ்சேனை மாகாளம் என்னும் பெயருடைய பிறிதொரு திருக்கோயில் வைப்புத்தலங்களுள் ஒன்றாக வைத்தெண்ணப்படுகிறது. வளையாபதியில் காளிதாய்த் தெய்வமாகக் கூறப்பட்டுள்ளாள். வைசிய புராணம், நீலகேசி முதலிய நூல்களிலும் காளிபற்றிய குறிப்புகள் உள்ளன. கலிங்கத்துப்பரணி தக்கயாகப்பரணி, கந்தபுராணம், வராகிமாலை, பாரதியார் பாடல்கள், அபிராமி அந்தாதி முதலியவற்றிலும் காளி வழிபாடு பற்றிய பல விபரங்கள் உள்ளன. காளிக்குத் தலையறுத்துக் காணிக்கையாகக் கொடுத்த வீரவழிபாடாக பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் காளி வழிபாடு சிறப்புற்று விளங்கியதை வரலாற்று மூலங்கள் உறுதி செய்கின்றன.

## காளி வடிவங்கள்

காளி மாதாவின் வடிவ அமைதி பற்றிய விபரங்களை சிற்ப நூல்களிலும், தந்திரசாஸ்திரங்களிலும், சாக்தமந்திர நூல்களிலும் கண்டு கொள்ள முடிகின்றது. காளிக்குரிய வடிவங்களின் தொகை திட்டவட்டமாக வரையறை செய்யப்படவில்லை. இரண்டு, நான்கு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினான்கு, பதினெட்டு என்ற கரங்களுடன் விளங்கும் காளியின் வடிவ பேதங்களைச் சிற்ப நூல்கள் சிறப்பாகச் சித்தரிக்கின்றன. இரண்டு கரங்களைக் கொண்டு விளங்கும் நிலையில் காளியின் இடது கரத்தில் கபாலம், அல்லது கலப்பை, அல்லது திரிசூலம் இருக்கும். அவளின் வலது கரத்தில் முறையே சூலம் அல்லது உலக்கை அல்லது திரிசூலம் விளங்கும். நான்கு கரங்களை உடைய காளி, பத்திர காளி வடிவங்களே இன்று அனேகமான ஆலயங்களில் வழிபாட்டில் இடம் பெற்றுள்ளன. அக்காளி வடிவத்தின் வலது இருகரங்களில் சூலமும் டமருகமும் இடது கரங்களில் கபாலமும், பாசமும் விளங்கும். சில காளி வடிவங்களில் இடது கரங்களில் நாகமும் பாசமும் காணப்படும். வலது கரங்களில் அபயம் சூலம் என்பனவும் இடது கரங்களில் பாசம் கபாலம் என்பனவும் கொண்டு விளங்கும் காளிவடிவங்களையும் சிற்ப நூல்களில் சித்தரிக்கின்றன. நான்கு திருக்கரங்களுடன் விளங்கும் பத்திரகாளி வடிவத்தின் இடது திருக்கரங்களில் சூலமும் வாளும், வலது திருக்கரங்களில் கபாலமும் கேடயமும் காட்சிதரும். பத்திரகாளி (பத்துக்கை), மகாகாளி (பன்னிரண்டுகை), சற்சண்டிகை (பன்னிரண்டுகை), சாமுண்டி (எட்டுக்கை), பைரவி (பதினெட்டுக்கை) சர்வமயமண்டி (எட்டுக்கை), காலாந்திரி (எட்டுக்கை) காளி (எட்டுக்கை) என்ற அஷ்டகாளி மாதாக்களின் அங்க அமைதிகள் பற்றிய விபரங்களை ரி. பி. கணேசமூர்த்தி தனது ஆலயவிக்கிரக நிர்மான ஆயாதி சிற்ப இரகசியம் என்ற நூலில் குறித்துள்ளார். காளி, காத்யாயினி, சாந்தா, சாமுண்டா, முண்டமர்த்தினித் வரிதா வைஷ்ணவி, பத்ரா, பத்திரகாளி என்ற ஒன்பது வடிவங்களை நவகாளிகள் என்பர். சாக்த தந்திர நூல்களில் ஸித்திகாளி, மஹாகாளி, பத்திரகாளி, சமசானகாளி, குஹ்யகாளி, தக்ஷிணகாளி, சாமுண்டாகாளி, தனகாளி, காமகலாகாளி என்ற

ஒன்பது வகையான காளியின் பேதங்களைக் குறிப்பிடுகின்றன. சாக்த நூல்கள் காளி தாரா, சோடசி, புவனேஸ்வரி, பைரவி, சின்னமஸ்தா, தூமாவதி, பகளாமுகி, மாதங்கி, கமலா என்ற தசமகாவித்தைகளைக் குறிப்பிடுகின்றன. சாக்த நெறியின் உபாசனைப் பிரிவுகள் பத்தினுள் காளியே முதலில் கூறப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சாக்தசமய நெறிகூறும் மகா வித்தையில் இரண்டு குலங்கள் உள்ளன. ஒன்று காளிகுலம் என்றும் மற்றது ஸ்ரீகுலம் என்றும் நிருத்தரா தந்திரம் குறிப்பிடுகின்றது அதில் காளிகுலத் தேவதைகளாக காளி, தாரா, ரக்தகளி, புவனா, மார்த்தினி, திரிபுடா, த்வரிதா, துர்க்கா, வித்யா, பிரதயங்கிரா என்போரும் ஸ்ரீகுலத் தேவதைகளாக சுந்தரி, பைரவி, பாலா, பகலா, கமலா, தூமாவதி, மாதங்கி, வித்யா, ஸ்வப்னாவதி, மகாவித்யா, மதுமதி என்போரும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சோழர் காலத்தைச் சேர்ந்த (கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு) காளியின் சிற்ப வடிவமொன்று திருவையாறு கோயிலுக்கு அருகில் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. காவிரிக்கரையில் அமைந்துள்ள பனையூர் கிராமத்திலிருந்த பத்தாரம்மன் கோவில் கர்ப்பக்கிரகத்தில் மூலவிக்கிரகமாக வைக்கப் பட்டிருந்த சிலையாக இருக்கலாமெனக் கருதப்படுகின்றது. இக்காளி சிற்பவடிவமானது. ஏனையகாளி சிற்பவடிவங்களினின்று மாறுபட்டு அமைகின்றது. திரிசூலம், வாள், பாசம், குறுவாள் ஆகியவற்றை வலதுகைகளிலும், கபாலம், கேடயம், மணி உடுக்கை ஆகியவற்றை இடது கைகளிலும் கொண்டு இலங்குகின்றாள்.


சகல விதமான பிடவை வகைகளுக்கும்

# துர்க்கா ரெக்ஸ்

பிரதான வீதி,
சங்கானை.

பலசரக்கு பொருட்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# விநாயகர் விற்பனை நிலையம்

சந்தைச் சதுக்கம்
சங்கானை.

# றெமிங்ரன் கல்வி வளர் சோலை

மூளாய் கிளை சுழிபுரம்

*21வது ஆண்டில் எமது கல்விச் சேவையில் மகிழ்கின்றோம்*

ஆண்டு **3 — O/L, A/L** வரை நடைபெறுகின்றன

★ O/L பகல்நேர வகுப்புக்களும் நடைபெறுகின்றன ★

K. மனோ
*நிர்வாகி*

*அன்பளிப்பு:*

# சஞ்சீவி வர்ணக் குவம்பு

## கட்டிடப் பொருட்கள் வாணிபம்

## திருநெல்வேலி

# ஆசைப்பிள்ளை அன் சன்

## நகைத் தொழிலகம்

"திருமகள் வாசம்"

நிகரை வீதி,

சங்கானை

அன்பளிப்பு:

# விநாயகர் சிற்பாலயம்

## திருநெல்வேலி

சு. இராசரத்தினம்

# சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தலவரலாறும் அம்பாளின் மகிமையும்

●○●○●

சிவநெறியும் செந்தமிழும் செழுமையுடன் திகழும் ஈழமணித் திருநாட்டின் தலையென விளங்கும் யாழ்ப்பாணம் நற்பதியின் வடமேற்கே யாழ் - காரைநகர் பிரதான வீதியின் பதின்நான்காவது கிலோமீற்றர் தொலைவில் வயலும், கனையும், கோவிலும், குளமும், கடலும், காடும் சார்ந்து மருதமும், முல்லையும், நெய்தலும் விரவி இருப்பது சுழிபுரம் என்னும் தொல்பதி.

இப்பழம்பதி பரந்தபெரும் நிலப்பரப்பையுடையதாக இருப்பதனால் இது மேற்கு மத்தி, கிழக்கு என முப்பிரிவுகளாசப் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கு திருவடிநிலை என்னும் புனித தீர்த்த தலமுடைய கடற்பரப்பை உடையது. மத்தி மரகதக் கம்பளம் விரித்தாலன்ன பழமை நிறைந்த பழனங்களையும், சரித்திரப் புகழ்வாய்ந்த காக்கைப் பிள்ளையென்னும் சின்னத்தம்பிப் புலவரினால் புகழ்ந்து பாடப்பெற்ற பறாளாய் விநாயகர் பள்ளின் கதாநாயகனின் திருத்தலத்தையும், பறாளாய் முருகன் திருத்தலத்தையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது.

கிழக்குப் பல்வேறுபட்ட தொழில்கள் செய்துவாழும் மக்கள் குறிச்சிகளைக் கொண்டது. இதில் உழுதுண்டு வாழ்பவர்களே அனேகர். இம்மக்கள் தம்தம் வாழ்வின் நலன்கருதி தம் சமூக முன்னேற்றத்திற்காக அறிவு வளத்திற்கு வித்தியாலயங்களையும் அருள் வளத்திற்கு ஆலயங்களையும் அமைத்துள்ளனர். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழிக்கிணங்க ஆன்மாக்களோடு சேர்ந்தும் தனித்தும் நின்று இலங்கியும், இயக்கியும் உயிர்களை உய்விக்க வழிகாட்டி ஆட்டி அடங்குவிக்கும் இறைவனுக்கு உயிர்கள் தம்பொருட்டு ஆலயம் அமைத்தலும், அமைத்த ஆலயத்தைப் புதுப்பித்தலும் பூசை முதலிய நித்திய நைமித்திய கருமங்களைக் குறைவறச் செய்தலும், பதிநல்வினையென ஆகம நூல்கள் கூறுகின்றன. அவ்வாறான ஒரு நற்பணியை சுழிபுரம் கிழக்கில் வாழும் - குறிப்பாக மரத்தை, இரும்பை மூலப்பொருளாகக் கொண்டு தொழில் புரியும் 'விஸ்வப்பிரம குலத்தினர்' தம் குறிச்சி நடுவே சக்திக்கு ஓர் ஆலயம் இற்றைக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே கண்டனர்.

இவ்வாலயம் உருப்பெற்ற சரியான காலம் எம்மால் கண்டுகொள்ள முடியவில்லை. கர்ண பரம்பரைக் கதையாகச் செவிவழக்காக நாம் அறிந்ததை இங்கு தருகின்றோம். போத்துக்கேயர் இலங்கையை ஆண்ட காலத்துக்கு முன்னர் ஒரு சிவன் முத்தர் இப்பகுதிக்கு இந்தியாவில் இருந்து வந்தார். அவர் இங்கு வந்தபோது இப்போது பத்திரகாளிஅம்பாள் இருககும் தலத்திலே மண்ணாலான ஓர் நாற்சார் வீடு இருந்தது. அந்த வீட்டின் முன்றலில் ஒரு கிளுவை மரம் நின்றது. அவ்வடியார் இக்கிளுவை மரத்தடியே தன்னுடன் கொண்டு வந்திருந்த இயந்திரத் தகட்டை பிரதிஷ்டை செய்து மிக்க மெய்யன்போடு காலை, மாலை நியமம் தவறாது பூசைசெய்து வரலாயினார்.

காலைப் பொழுது புலர்வதன் முன் துயிலெழுந்து நித்திய கடன்களை முறைவற

முடித்து இயந்திரத்துக்குப் பூசை செய்த
பின் அவ்விடத்தைவிட்டு வெளியே சென்று
விடுவார் அதன்பின் அவரது செயற்பாடு
எதுஎன்பது எவருக்குமே புரியாத புதிர்.
ஆனால் மாலையானதும் மறுபடியும் அங்
கே வருவார். தன்னையும் சூழலையும் சுத்தி
செய்து சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு
அந்தத் தெய்வீக யந்திரத்துக்குப் பூசை
செய்வார். பின் ஆவின் பாலையே சிறிது
ஆகாரமாக அருந்திவிட்டு உறங்கிவிடுவார்.
இதுதான் அவரது வாழ்க்கை முறையாக
இருந்தது.

ஒருநாள் வழமைபோல் அவர் தம்
காலைப் பூசையை முடித்துக்கொண்டு வெளி
யே புறப்பட்டார் மாலையானதும் தலத்துக்
குத் திரும்பிவந்தார். தன் கடன்களை
முடித்துக்கொண்டு பூசைக்காக இயந்திரம்
இருந்த இடத்திற்குச் சென்றார். அங்கே
அவர் கண்ட காட்சி! அவரை அதிரவைத்
தது. அவர் அதுவரை பூசித்துவந்த அத்
தெய்வ இயந்திரத்தகடு நிலத்துள்ளே இற
ங்கிவிட்டது. இதுகண்ட அவர் தனது ஞான
திருஷ்டியினால் அம்பாள் சித்தத்தை அறி
ந்துகொண்டார். உடனே அத்தலத்தின் சூழ
லிலே வாழ்ந்த மக்களை அழைத்து ஓர்
உண்மையை உணர்த்தினார்.

தான் இதுவரை பூசித்துவந்த இயந்
திரம் பத்திரகாளி அம்பாள் என்றும் அச்
சக்தி இவ்விடத்தில் நிலைத்திருந்து மக்களு
க்கு அருள்பாலிக்கும் ஆகவே இவ் அம்பா
ளை நன்முறையில் ஆதரித்து அருள்பெறுங்கள்
என்றுகூறி வழிபாட்டு முறைகளையும் கூறி
அச் சீவன்முத்தர் அவ்விடம்விட்டகன்றார்.
அதன்பின் அவரைக் கண்டுகொள்ள எவரா
லும் முடியவில்லை.

பின்னர் அச்சூழலிலுள்ள மக்கள் மிக
வும் பக்தி சிரத்தையுடன் அக் கிளுவை மர
த்தை உள்ளடக்கிய நிலப்பரப்பில் ஓர் ஓலைக்
குடில் ஆலயம் அமைத்தனர். பயபக்தியுடன்
தீபம் ஏற்றிப் பொங்கல் செய்து படைத்து
பாடிப் பரவி மகிழ்ந்தனர். அம்பாளும்
அங்கு இனிது அமர்ந்து தன்னை நாடிவரும்
அடியார்களுக்கு அருள்பாலித்து அற்புதங்
கள் பல புரிந்துவந்தாள். இப்படியே பல
வருடங்கள் நடைபெற்றன. இப்படியிருக்கும்
காலத்தில் எக்காரணங் கொண்டோ அந்த
ஓலைக்குடில் தீ வாய்ப்பெற்று எரிந்து சாம்
பராயிற்று. இதுகண்ட அடியார்கள் துன்பம்
மீதுரப்பெற்று அம்பாளுக்கு மண்ணாலான
ஒரு கோயிலைச் சமைத்து வழிபட்டுத்
தமது கருமங்களை ஆற்றினர்.

அதன்பின் அம்பாள் கடாட்சமும்
திருவருட்பேறும் என்னவோ அக் கோயிலின்
தென்புறத்தே வாழ்ந்துவந்த மெய்யடியா
ரான தெய்வ பக்தர் திரு சின்னத்தம்பி
குமரேசு என்பவர் தன் தொழில் விடுத்து
அம்பாளுக்குப் பூசகரானார். அக் காலத்தில்
அம்பாளின் அருள், மென்மேலும் பொலி
வுற்றுத் திக்கெட்டும் பரவியது எனலாம்.
இலங்கை அடங்கிலும் இருந்தும் மக்கள்
இங்கு வருகைதந்து அம்பாளை வழிபட்டுத்
தமது நேர்த்திகளைச் செய்து தேவையான
வற்றை அம்பாளிடமிருந்து பெற்றுச் சென்
றனர். அம்பாள் கிருபாகடாட்சத்தினால்
அப் பூசாரியினுடைய கைராசி பக்தர்களி
டையே நம்பிக்கை ஊட்டியது. குழந்தை
களுக்கேற்படும் திடுக்காட்டியம், பிணி முத
லிய வியாதிகளுக்கு அப்பூசகர் விபூதி இட்டு
பார்வை பார்த்தால் அது நீங்கிவிடும். மக்
களும் இதில் நம்பிக்கை கொண்டனர்.
பெரியவர்களும் தங்கள் உடலில் ஏற்படும்
குறைபாடுகளுக்கு ஓதிப் பார்க்கவும் நூல்
கட்டி நிவாரணம் பெறவும் அப்பெரியாரை
நாடினர்.

இப்படியே நாளாக ஆக அம்பாளின்
ஆலயத்தில் பக்தர்வெள்ளம் கரைபுரண்டது.
இதன்போது அப்பெரியார் அம்பாளுககு ஓர்
கற்கோயில் காணவேண்டுமென்று பேரவா
உந்தப் பெற்றார். திருப்பணியின் வேலைக்
கான நிதி திரட்டும் நற்பணியில் ஈடுபட்
டார். பக்தர்கள் போதிய அளவு ஆதரவு
நல்கினர். இருந்தும் நிதிபற்றாக்குறை ஏற்
பட்டது. அம்பாளின் சித்தமோ என்னவோ

நிதிபற்றாக்குறையை மலேசியா, சிங்கப்பூரில் உள்ள அம்பாளின் அடியார்கள் அறிந்து கொண்டனர். அவர்கள் சின்னத்தம்பி குமரேசு என்னும் இப்பூசகரை நிதிதிரட்டும் பொருட்டு மலேசியா வரும்படி அழைத்தனர். இவ்வழைப்பை அம்பாளின் அழைப்பாகக் கருதிய இப்பூசகர் அக்காலத்தில் மலேசியா நாடு சென்றார். பக்தர்கள் இவரை வரவேற்றுப் போதிய நிதியைச் சேர்த்து உதவினர். போதிய பணத்துடன் தாய்நாடு மீண்ட இப்பெரியார் ஆலயச் சூழலில் உள்ள ஏனைய மக்களையும் சேர்த்து "வெள்ளை வைரக் கல்லால்" அம்பாளுக்கு ஆலயம் அமைக்கத் தொடங்கினார். வசதிகள் குறைந்த அக்காலத்தில் மட்டுவில் போன்ற இடங்களிலிருந்து வெள்ளை வைரத்தைத் தருவித்தும், சுன்னாகத்தில் இருந்து கோயில் கட்டும் சிற்பிகளை அழைத்துவந்தும் வேலைகள் துரிதகெதியில் நடைபெற்றன. இப்படி நடைபெறும் காலத்தில் நிதிநிலை குன்றத் தொடங்கியது. மலேசியாவில் இருந்து கொண்டு வந்த பணமும் இங்குள்ள மக்கள் தாராளமாக வாரிவழங்கியவையும் தீர்ந்து விட்டன. செய்வதறியாது இப்பூசாரியார் மிக்க பணமுடையில் வாடினார். அம்பாளின் திருவுளப்படி மீண்டும் மலேசியாநாடு செல்ல சித்தங்கொண்டார்.

மலேசியாவில் வாழ்ந்த மெய்யடியார்கள் பலர் இப் பூசகரைப் பெருவிருப்போடு உபசரித்துப் போதிய நிதியையும் திரட்டிக் கொடுத்தனர். (இதன்படி இப்பூசகர் மீண்டும் பலமுறை இக்கைங்கரியத்துக்காக மலாய்நாடு சென்றார் எனத் தெரியவருகிறது) தாய்நாடு திரும்பிய இவ்வடியார் ஆலயச் சூழலில் வாழ்ந்த அடியவர்களின் பூரண ஒத்துழைப்புடன் ஆலயக்கட்டிட நிர்மான வேலைகளைக் குறைவற நிறைவாக முடித்து அம்பாளைத் திருமுழுக்காட்டி, மகாகும்பாபிஷேகம் செய்து, கற்கோவிலுள் அம்பாளை எழுந்தருளச் செய்து தானே அம்பாளுக்கு நிவேத்தியம் வைத்துப் பூசைசெய்து மகிழ்ந்தார். தொடர்ந்தும் இவரே பூசகராகவிருந்து அம்பாளுக்குப்பணி செய்ததுடன், அடியார்களின் குறைகளையும் அம்பாளின் துணைகொண்டு தீர்த்து வந்தார். அச்சூழலில் வாழும் மக்களின் அன்பும் அறிவும், பண்பும், பெருமையும், விருப்வாசலும், வீரமும் வெற்றியும், ஆக்கமும் ஆற்றலும் ஆகிய இகபரம் இரண்டிற்கும் ஏதுவான எல்லா வளங்களும் பெறச் செய்து மகிழ்ந்தார். இங்ஙனமாக அம்பாளைப் பூசித்துவந்த பூசாரியாருக்குக் காலப்போக்கில் இயலாமை தொடங்கியது.

இதையறிந்த ஆலயச்சூழலில் வாழ்ந்த இவரது உறவினரான திரு. சித்தம்பலம் ஆசைப்பிள்ளை அவர்கள் ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். இவரும் அம்பாளை நன்முறையில் பூசித்து ஆலய நிர்வாகத்தை நன்கு பரிபாலித்து வந்தார். இவரது காலத்திலும் அம்பாளின் ஆலயம் புதுப் பொலிவைப் பெற்றுப் பல ஆக்கபூர்வமான பணிகளைக் கண்டது. "ஆலயத்தைப் புதுப்பித்து பண்டிகை வேலைகள் செய்து, சிற்பங்கள் வைத்து மெருகூட்டி இரண்டாவது மகாகும்பாபிஷேகம் செய்து மகிழ்ந்தார். தற்போது ஆலயத்தின் முன்றலில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் முற்கொட்டகை. இவரது காலத்தில் இவரது விடாமுயற்சியின் பயனாய் உருவானதாகும். இக்காலில் இவரது உறவினரான மூவர் (உடுவிலைச் சேர்ந்தவர்கள்) அம்பாளின் ஆலயத்தில் உரிமைகோரி தாங்களும் தர்மகர்த்தாக்களாக இணைந்து கொண்டனர். இந்நான்கு தர்மகர்த்தாக்களும் சேர்ந்து ஆலய நிர்வாகத்தைச் சீராக நடாத்திவந்தனர். திரு சிற்றம்பலம் ஆசைப்பிள்ளை அவர்கள் ஆலயத்தின் பின் வீதியில் வசித்து வந்தபடியினால் அவர் தானே முழுப்பொறுப்பையும் ஏற்று ஆலய நிர்வாகப்பணியை நன்கு பரிபாலித்து வந்தார். இவரது மறைவுக்குப் பின்னர் இவரது புத்திரர்கள் தந்தையின் அறப்பணியைத் தம்சிரமேற்கொண்டு அம்பாளின் பூசை முதலிய திருப்பணிகளை குறைவற நடாத்திவந்தனர்.

காளடைவில் காலத்தின் மாற்றத்துக்

கேற்ப காரியங்களும் ஒழுகவேண்டுமென்ற சீரிய நோக்கத்திற்கிணங்க, திரு. சிற்றம்பலம் ஆசைப்பிள்ளையின் மைந்தர்களும் உடுவிலைச் சேர்ந்த மற்றும் மூன்று தர்மகர்த்தாக்களும் திரு. கணவதிப்பிள்ளை பொன்னையா திரு. இராமலிங்கம் சுந்தரம், சின்னப்பு கன்கசபை சேர்ந்து ஆலயச் சூழலைச் சேர்ந்த தம் இன மக்களை அழைத்து தங்களுடன் சேர்ந்து எல்லோரையும் உள்ளடக்கிய தேவஸ்தானப் பரிபாலன சபை ஒன்றை 1975 ஆம் ஆண்டு உருவாக்கினர். தர்மகர்த்தாக்கள் நால்வரில் ஒருவரே எந்நாளும் சபையின் தலைவராய் இருப்பர் என்ற கோட்பாட்டுக்கமைய இச்சபை உருவானது. சபையின் முதலாவது தலைவர் அமரர் திரு இ. சுந்தரம் அவர்களாகும்.

எமது தேவஸ்தானப் பரிபாலனசபையினரும் யாவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் மிகச்சிறப்பாகச் செயற்படத் தொடங்கினர். புதிய மகோற்சவங்களை ஆகமவிதிப்படி ஆரம்பித்து அம்பாளின் அருளை மக்கள் யாவரும் அனுபவிக்கச் செய்தனர். கிடைக்கும் நிதியை ஒன்று திரட்டிக் காலத்துக்குக் காலம் பல திருப்பணி வேலைகளைச் செய்தனர். அம்பாளுக்கு மூன்றுகாலப் பூசை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு நியமம் தவறாது தினமும் நடப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டனர். ஆலயக் கருமங்கள் யாவும் ஒரு சீராக நடப்பதற்கு நிரந்தரமான காரியஸ்தர் ஒருவர் நமது ஆலயத்துக்குத் தேவை என்பதை உணர்ந்து அத்தேவையை நிறைவு செய்தனர். அம்பாளின் அடியார்களும் தேவஸ்தானப் பரிபாலன சபையினரின் முன்மாதிரியான திட்டங்களுக்குப் போதிய ஆதரவு நல்கினர்.

இந்நிலையில் காலப்போக்கில் அம்பாளின் ஆலயம் இயற்கையாகச் சிதைவுக்குள்ளாக்கப்பட்டதை சபையினரும் அம்பாளின் அடியார்களும் உணர்ந்தனர். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் திரு. சிற்றம்பலம் ஆசைப்பிள்ளை அவர்களால் செய்யப்பட்ட கும்பாபிஷேகத்துக்குப் பின்னர் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை என்பதை உணர்ந்தனர். கற்பக்கிரகத்தின் மேலுள்ள விமானம் (தூபி) மற்றும் விக்கிரகங்கள் யாவும் மிக மோசமாகக் காலத்தால் சிதைவுற்றுக் காட்சியளித்தது. இதைக்கண்டு கவலையுற்ற சபையினரும் பக்தர்களும் அம்பாளையும் ஏனைய மூர்த்திகளையும் பாலஸ்தாபனம் செய்துவிட்டு அடுத்த கும்பாபிஷேகத்தைக் கண்டு களிக்கப் பேரவாக் கொண்டனர். துரிதமாகச் செயற்பட்டனர்.

1990 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் வீரபத்திரருக்கும் பத்திரகாளிக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் ஓரிடத்தில் பாலஸ்தாபனம் செய்து கோவிலைப் புனருத்தாரணம் செய்ய முற்பட்டனர். தமது மூதாதையரைப்போல் தாமும் இக்கோயிலை ஆகமவிதிப்படி அருளும், அழகும் மிளிர வடிவமைக்கப் பேரவாக் கொண்டு பக்தர்களின் பூரண ஒத்துழைப்புடன் மிக வேகமாகச் செயற்பட்டனர். இந்த வேளையிற்றான் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது. எதிர்பாராத விதமாக நாட்டு நிலைமை மிக மிக மோசமடைந்தது. தொடர்ந்தும் கட்டடத்துக்குத் தேவையான சீமெந்து போன்ற மூலப் பொருட்கள் எடுக்கமுடியாத அவல நிலை தோன்றியது. இதனால் சபையினரும் அம்பாளின் அடியவர்களும் தாங்கொணாத் துயரடைந்தனர். இருந்தும் சபையினர் தளர்வடையவில்லை. அங்கும் இங்கும் ஓடித்திரிந்து சிறுகச்சிறுக மூலப் பொருட்களைத் தேடிப்பெற்று வேலைகளைச் செய்து வந்தனர். இந்நாளில் இந்த ஐந்தாவது வருடத்தில் அம்பாளின் குடமுழுக்குக்காண அடியவர்கள் துடியாய்த் துடித்தனர். செய்வதறியாது ஏங்கி நின்ற வேளையில் எம்பெருமாட்டியின் திருவருட்பேறால் அடியார்களும் பக்தர்களும் கிள்ளியும் அள்ளியும் தந்த நிதியினால், அம்பாளின் ஆலயம் இன்று புதுப்பொலிவுடன் திகழுகின்றது. கட்டடப் பொருட்கள் யானை விலை குதிரை விலை விற்கும் இந்நாளில் பல நூறாயிரம் ரூபாய்களை அம்பாள் தம் அடியார்கள் வாயிலாக எம்மிடம் சேர்ப்பித்தாள் என்னே அம்பாளின்

திருவிளையாடல்? கட்டிடப் பொருட்களும் அவ்வப்போது முட்டின்றிக் கிடைத்தன உண்மையும், விசுவாசமும், பக்தியுமுடைய அடியவர்களின் விடாமுயற்சியினால் அம்பாளின் ஆலயம் இன்று புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகுடமுழுக்காட்டுப் பெருவிழா காணப் பெற்றுள்ளது. (தை 27 திதி மிருகசிரிடம் 10-02-95)

## அம்பாள் மகிமை

சக்தி இன்றேல் சிவம் இல்லை. சிவம் இன்றேல் சக்தி இல்லை. என்பது ஆன்றோர் வாக்கு. இறைவன் வல்லமையே சக்தி "எந்நிறம் நின்றான் ஈசன் அந்நிறம் அவளும் நிற்பாள்" என்பதற்கிணங்க எங்கள் சக்தி வீரபத்திர சுவாமியின் சக்தி பத்திரகாளியாக பரிவார மூர்த்திகளோடு எழுந்தருளி அருள்பாலிக்கிறாள்.

அம்பாளின் அருட்டிறனும், மகிமையும் அளப்பரியது. அவள் அடியாருக்கு அருள்சுரக்கும் திறன் எடுத்தியம்பப்பாலதன்று எத்தனையோ அடியவர்களின் வாழ்க்கையில் அம்பாள் காட்டிய அருளையும் கருணையையும் விரிக்கிற் பெருகும் அம்பாளின் அருட்டிறனை அடியார்கள் உள்ளமுருகி மெய்பொடிபட கண்ணீர் அருவியாய்ப் பாயத் நிலைதடுமாறி மெய்நடுங்கி, விதிர்விதிர்க்கச் சொன்ன கதைகளை நாம் இங்கே கூறிற் பெருகும்.

அம்பாள் வீற்றிருக்கும் தலத்திலே தீராத வியாதியாளர் வாழ்க்கையில் தோல்வியடைந்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டோர் தலைமேல் தூக்கிய கையராய், உருண்டும் புரண்டும், அழுதும் புலம்பியும் கத்தியும், கதறியும் மனமுருகித் துதிபாடி உன்மத்தராகி நின்றஞ்சும் நிலைகண்டால் நாத்திகனும் ஆத்தியனாகி விடுவான். இப்படித்தம் தம் குறை இரந்து உய்தியடைந்தோர் தொகை சொல்லற்பாலதன்று தாங்கள் அம்பாளிடம் வைத்துப் போன நேர்த்தி முடிப்பதற்கு இலங்கையின் பல நூறுமைல் தூரத்தில் இருந்தும், வெளிநாட்டில் வசிக்கும் தம்பிள்ளைகளினதும் உறவினர்களினதும் நேர்த்தியை முடிக்கத் தினசரி ஆலயத்துக்கு மக்கள் கூட்டம் வந்தவண்ணம் உள்ளது.

## பொங்கலும் பூசையும் பலி இடும் வழக்கமும்

இத்தலத்தின் முன்றலில் நிற்கும் அரச மரங்கள், வாகை மரங்களின் செழுமையும் குளிர்மையும் மனதிற்கு இதம் தரும். இச்சூழலில் நிற்பதே ஒரு இன்பம். இத்தலத்தில் பண்டுதொட்டு பங்குனி மாதத்தில் வரும் முதற் செவ்வாய்க்கிழமையில் வருடாந்தப் பொங்கல் விழாவிற்குரிய விளக்கேற்றும் வைபவம் நடைபெறும். இது பொங்கல் இரண்டையும் அசம்பாவிதம் ஏதும் இல்லாமல் சிறப்பாகப் பக்திசிரத்தையுடன் நடாத்தி முடிப்பதற்கு அம்பாளிடம் இருந்து விடைபெற்றுக்கொள்வதாகும். இந்நிகழ்ச்சி மிக்க பயபக்தியுடன் நடக்கும். இந்நிகழ்வின்போது மூதாதயரினால் நமக்கு அளிக்கப்பட்ட பக்திப் பாடல்களைப் பாடி அம்பாளிடமிருந்து விடை பெறப்படும். அதன்பின்னர் அடுத்த செவ்வாய் முதற் பொங்கல் (பெரிய வேள்வி) நடைபெறும். அதற்கு அடுத்த செவ்வாய் இரண்டாவது பொங்கல் (எட்டாம் வேள்வி) நடைபெறும்.

பொங்கல் காலம் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும் நாட்டின் எண்திசையில் இருந்தும் மக்கள் வெள்ளம் பலவர்ண உடை உடுத்துப் பூசை பொங்கலுக்குரிய பல பொருட்களையும் கையில் ஏந்திய வண்ணம் வரும்போது வானவில்லின் அழகு காணலாம். அடியவர்களின் பொங்கலில் பல்வேறு விதமான பொங்கற் சாதங்கள் இடம்பெறும் பக்தர்கள் பொங்கிப் படைத்த பல்வேறு வகையான பிரசாதத்தின் ஒரு பகுதியை அம்பாளின் ஆலய முறையில் சேர்ப்பர். பின் அச்சாதத்தை நோயாளிகளுக்கும், ஏழைகளுக்கும், யாசகர்களுக்கும் பகிர்ந்து கொடுப்பர். இதை உட்

கொண்ட மக்கள் பசிப்பிணியும் உடற்பிணியும் நீங்கி மனத்திடமும் உடல் வலிமையும் பெற்றவராவர். பொங்கற் காலங்களில் அம்பாளின் இப்புனித பிரசாதம் சிறிது வாங்கி உண்டு தப்பிணி தீர்ப்பதற்கு அம்பாளின் அடியார்கள் கூட்டம் பல மைல் தூரத்தில் இருந்தும் இத்தலத்திற்கு வருவர் இப்படியான ஒரு நிகழ்வை வேறெந்தத் தலத்திலும் காணமுடியாது.

பொங்களின் போது ஆலய முன்றலில் வாழைக்குலைப் பந்தல் அமைக்கப்படும். நேர்த்தி வைத்தோர் வாழைக்குலைப் பந்தலின் மேற்பகுதியில் பல்வேறு வகையான வாழைக்குலைகளை அழகுற அலங்காரமாகக் கட்டித் தொங்க விடுவர் பழங்கால வேதகால வழக்கமான வேள்வி முறை எப்படியோ இவ்வாலயத்திலும் வந்து குடிகொண்டது. அது எப்படி வந்தது? எங்கிருந்து வந்தது? எப்போது நம் ஆலயத்தில் வந்தது என்று எம்மால் கண்டு கொள்ளமுடியவில்லை. வாழைக்குலைப் பந்தலின் முன்னால் அமைக்கப்பட்ட வேள்விச் சாலையினுள் ஆட்டுக்கடா, கோழிச்சேவல் என்பன பலியிடப்படும். அன்புடன் வளர்க்கப்பட்ட அப்பிராணிகள் இறைவனின் ஆலயத்தின் முன்றலில் பலியிடப்பட்டன. பொங்கலின் போதும் மீன், இறைச்சி, முட்டை ஆகிய புலால் உணவுகளும் சமைத்துப் படைக்கப்பட்டன. ஒரு கால கட்டத்திலே யாழ்ப்பாணத்தில் உள்ள பல ஆலயங்களின் முன்றலிலே பலியிடும் வழக்கம் பரவலாக மேலோங்கி இருந்தது. இந்த முறையைச் சித்தாந்திகள் ஏற்றுக் கொள்ளவில்லை படித்த பண்பாளர் இதை வெறுத்தனர். இதன் பயனாகப் பலியிடுவோருக்கும் சிவகாருணியமுள்ள பெரியார்களுக்குமிடையே பெரியதொரு இடைவெளியும் முரண்பாடும் ஏற்பட்டது. இதன் பேறாக நாட்டில் பரவலாக ஆலயங்களின் முன் பலியிடும் இக்கொடிய பாவச் செயல் நிறுத்தப்பட்டது.

இம்முறையை விரும்பிய சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய நிர்வாகிகள் இவ் அம்பாளின் ஆலயத்தின் முன் பலியிடும் வளக்கத்தை நிறுத்தினர். அம்பாளுக்குப் பொங்கல், பூசைகள் சிறப்பாக நடப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டனர். நேர்த்திக்காகக் கொண்டுவரும் ஆடுகள், கோழிகளை உயிருடனேயே அம்பாள் ஆலயத்தில் விட்டுச்செல்லும் வழக்கத்தை உருவாக்கினர். பொங்கல் காலங்களில் மக்கள் தூர இடங்களில் இருந்து மாட்டுவண்டிகளிலும், துவிச்சக்கரவண்டிகளிலும், மோட்டார் சயிக்கிளிலும் கார் வாகனத்திலும், பாதசாரிகளாகவும் சாரி, சாரியாக சர்வ அலங்கார பூசணராக ஆண்களும், பெண்களும் முதியோரும், சிறுவர்களும் வரும் காட்சி மனதைக்கவரும்.

ஆலயச் சூழலில் பலவித பொங்கல்களைப் பொங்கும் மக்கள் கூட்டமும். பல்லங்காடியையும் அங்காடியை மொய்த்து நிக்கும் மக்களின் கூட்டத்தையும், இன்னிசை வாத்தியங்களும் பக்திப்பாடல்களும், வேத மந்திர ஒலிகளும் மனதைக்கவரும் இந்த அற்புதக் காட்சியைக்காணவும். மறுபடியும் எம் அம்பாள் கற்கோவிலில் எழுந்தருளி அருள்பாலிக்கிறாள், இப் பெருவிழாக்காண வாரீர்.

**தேவஸ்தான பரிபாலன சபை**

சுழிபுரம் பத்திரகாளி அம்பாளின் நல்லருளை
வேண்டுபவர்கள்

ரஞ்சன் கட்டிடப் பொருள்
விற்பனை நிலையம்

மருதடிப் பிள்ளையார் கோவிலடி,
மானிப்பாய்

# அம்பாள் துதி

○●○●○●○●○●○●○●○

## காப்பு

பல்லோர் புகழ்பதி சோழியபுரமூர் சோதி
நல்லாயி ருந்தருள் நாயகி – வல்லோய்
கொற்றவை காளி கொடுமை களைந்துயர் துடைக்கும்
நற்றமிழால் நான்பாட நயந்தருள்தா.

தங்கும் வீரபத்திர ருடனுறை பத்திரகாளி
தனிப்பெரும் சக்தி
எங்குமெதிலும் தங்குசத்தி இங்கு
சோழிய புரத்திடை மேவி
பொங்குமறிவின் பேறாய்க் கற்றோர்
உணர்விலூறிய வல்லமை
மங்கா விளக்காய் மனதிடை ஒளிர்வாள்
மகாசக்தியிவளே மாண்புடைத் தெய்வம்

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வீரமும்
நிறைத்திடும் அன்னையிவள்
பஞ்சுக்கு நேர்பல துன்பங்களென்றிவள்
பார்வை எமக்கறையும்
வஞ்சனையின்றிப் பொய்யின்றிச் சூதின்றி
வையக மாந்தரெல்லாம்
தஞ்சமென்றிவள் தாளினைப் பணிந்தால்
தகுந்த பதமளிப்பாள்.

நம்பிக்கை கொண்டிவள் நற்பதம் போற்றில்
நலிந்துளம் தளர்வதில்லை - மாந்தர்
கும்பிட்டெந் நேரமும் கூப்பிடும் போதினில்
குளிர்ந்தருள் நல்கி – பக்தர்
குண்டுக்கும் அவக்குக்கும் துயரின்றி வாழ்ந்திட
துணைசெய்யும் தாயசக்தி – இவள்
உண்டென்று திடங்கொண்டால் உயர்வழிகாட்டி
உம்பரில் ஏற்றிடுவாள்.

ஆக்கம்: செல்வி இ. சுப்பிரமணியம் ஆசிரியை

அன்பளிப்பு

கிருஷ்ணன் அழகு நிலையம்.



நவீன சந்தை யாழ்ப்பாணம்

# செயலாளரின் நோக்கு

முதற்கண் எங்கள் குல தெய்வம் பத்திரகாளித் தாயினுடைய பாதாரவிந்தங்களைச் சிரந்தாழ்த்தி வணங்கிக் கொண்டு எல்லாம் வல்ல எங்கள் இறைவிக்கு எழில் மிகு கற்கோவில் அமைப்பதற்கும், இக் கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கும் உறுதுணையாகவிருந்த சகல அம்பாளின் அடியார்களுக்கும் எனது பணிவன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அவளின்றி ஓர் அணுவும் அசையாது" இதில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. அன்னையின் அருள்தான் எமக்கு ஆலயப் புனருத்தாரணம் என்ற சிந்தனையைக் கொடுத்தது. பின் இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னும், இவ் இக்கட்டான சூழ்நிலையிலும் மகாகும்பாபிஷேகத்தைக் காணவைத்ததும் அன்னையின் இன்னருளே. 1990 சித்திரையில் எங்கள் அன்னை பாலஸ்தாபனம் கண்டாள் தொடர்ந்து துரிதகெதியில் வேலைகள் நடைபெற்றன. 1990 ஆடியில் இரண்டாவது ஈழப்போர் தொடங்கியது. இதுவும் எம் அன்னையின் அருள் என்றே கொள்ளவேண்டியுள்ளது. போர் தொடர்ந்தது எங்கள் திருப்பணிவேலையும் தொடர்ந்தது மூலப்பொருட்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக அம்பாள் கிடைக்கச் செய்தாள். அம்பிகையின் அடியார்களின் ஆதரவு பல்கிப் பெருகியது. இது எம்மை உற்சாகப்படுத்தியது. மக்கள் நிதியை வாரிவழங்கினர். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக எங்கள் ஆலய நிர்மாண வேலைகள் மெள்ள மெள்ள வளரத்தொடங்கின. அத்துடன் ஆலய நிர்மானத்துக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலையும் வளரத் தொடங்கின. செய்வதறியாது நாம் திகைத்தோம் சீமெந்து, கருங்கல் போன்ற மூலப்பொருட்கள் யாழ்நடா நாட்டில் அறவே எடுக்க முடியாமல் போனது. இந்நிலையில் நிர்வாகத்தினராகிய நாம் மனந்தளரவில்லை. அங்கும் இங்கும் ஓடி, அலைந்து இப் பொருட்களைச் சிறுகச் சிறுகப் பெற்று வேலைகளைத் தொடர்ந்தோம். இப் பொருட்களை எங்கள் தாய்க்குத் தந்து உதவிய அடியவர்களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாலயத்தை ஆகமவிதிக்கமைய நவீன முறையில் நிர்மாணிப்பதற்கு எங்களை வழிநடத்திய பொறியியலாளர் மதிப்பிற்குரிய திரு நடேசன் அவர்களது பணி அளப்பரியது. அவர் தற்போது இங்கில்லாது விட்டாலும், அவர் இவ்வாலயத்தில் ஆற்றியபணி அவரை எந்நாளும் எமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கிறது.

திரு. நடேசன் அவர்கள் அவுஸ்திரேலியா செல்லும் போது சில்லாலையைச் சேர்ந்த இளம் பொறியியலாளர் திரு த. ஆறுமுகம் அவர்கள் தனது பணியைத் தொடர்வார் என்று கூறிச்சென்றார். அவர் கூறியதன்படி திரு ஆறுமுகம் அவர்கள் தனது தொழிலை அம்பாளுக்குச் செய்யும் ஒரு தொண்டாகக்கருதி மிகவும் பக்தி விசுவாசமாகச் செய்து வந்தார். எந்த விதப்பலனையும் எதிர்பாராது கால நேரம் பாராது இவர் ஆற்றிய சேவை சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வரலாற்றில் அழியாது என்றும் நிலைத்திருக்கும். எங்கள் ஆலயத்தில் உள்வந்தவுடன் இவரினதும் திரு. நடேசனினதும் ஞாபகம் தான் எமக்கு வரும். ஆகமவிதி மாறாது பொலிவுடன் கூடிய விலாசமான மண்டபங்களைத் தமது தொழில் நுட்பத்திறத்தால் எமக்குத் தந்தருளிய இவ்விரு பொறியியலாளர்களுக்கும் அம்பாள் சகல வளங்களையும் வழங்குவாள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. நிர்வாகத்தினராகிய நாமும் அம்பாளின் அடி

யார்களும் இவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளோம். இதனைத் தொடர்ந்து ஆகம விதிப்படி அளவுகள் அமைவதற்குத் தேவை யான போதெல்லாம் இங்கு வருகை தந்து தனது ஆலோசனைகளை வழங்கிய மதிப் பிற்குரிய பெரியார் விஸ்வப்பிரம ஸ்ரீ சோமசுந்தரம் ஸ்தபதியார் அவர்களுக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். தேவஸ்தானத்தின் தூபிகளில் உள்ள பளிச் சிடும் கலசங்களும் இவரது கைவண்ணங் களேயாகும்,

நாம் யாவரும் அறிந்த வண்ணம் நமது தேவஸ்தானப் பரிபாலனசபையின் மூத்த உறுப்பினரும் எமது ஆலயத்துக்கு ஒரு பரிபாலன சபை வேண்டுமென்று முயற் சித்து அதில் வெற்றி கண்டவரும், எமது நிர்வாகத்தில் காலத்துக்குக் காலம் பலவித பதவிகளை வகித்துத் திறம்படச் செயற் பட்டவருமான அமரர் திரு மு. இராமசாமி அவர்கள் எங்கள் எல்லோராலும் போற் றப்படவேண்டியவராகும். இப்பெரியார் எங்கள் அம்பாளைப் பாலஸ்தாபனம் செய்து அம்பாளுக்கு எழில்மிகு கற்கோவில் ஒன்று மிகஅழகாக அமைத்துக் கும்பாபிஷே கம் செய்யவேண்டுமென்று ஆவல் கொண் டிருந்தார். அமரரது ஆசைக் கனவு இன்று நினைவியுள்ளது. ஆனால் இன்று அழகுடன் காட்சியளிக்கும் ஆலயத்தையும் அதனுள் எழுந்தருளியிருக்கும் அம்பாளையும் பார்த்து ரசிப்பதற்கு, இப் பெரியார் எம்மிடையே இல்லையே என்று நாம் ஏங்குகிறோம். அவரது வாரிசாகிய நாம அவரது ஆசைக் கனவை நிறைவாக்கி விட்டோம் என்று மனச் சாந்தியடைவோமாக.

அடுத்ததாக எமது சபையின் ஆரம் பகால உறுப்பினரும், நிர்வாகசபையின் முக்கிய உறுப்பினருமான அமரர் திரு சி. கனகரத்தினம் அவர்களை என்னால் என் றும் மறக்கமுடியாது. நாம் எல்லோரும் கனகண்ணை என்று இவரைச் செல்லமாக அழைப்போம். மெலிந்த சிறிய உருவம். அப்பப்பா, இந்தச்சிறிய உருவத்தின் மூளை வளம் அபாரமானது. கடமை உணர்ச் சியைப் பற்றிச் சொல்லவோ தேவையில்லை. இப்போதுள்ள சில அமைப்புக்களை நாம் நோக்கினால் அதன் உத்தியோகத்தர்கள் தலைவர், காரியதரிசி போன்றோர் பதவி யைத் தலையில் தாங்கித் திரிவார்கள். ஆனால் செயற்படமாட்டார்கள். செயற் படுவோருக்கும் செயற்பட வழிவிட்டுக் கொடுக்கமாட்டார்கள் இதனா லேயே பொது நிறுவனங்கள் அழிவுப் பாதையை நோக்கிச் செல்கின்றன, இந்த நோக்கிலே எமது கனகண்ணரை நோக்கி னால் இவர் ஒரு கடமை உணர்ச்சி மிக்க செயல்வீரர்.

எமது ஆலயம் ஒரு புதுப் பொலிவு டன் மிளிர்வதற்கு இவர் ஒரு கலைஞர் என்ற ரீதியிலே தனது பணியை நிறைவாக இங்கு செய்துள்ளார். ஆலயத்தின் உள்ளே வந்து நிமிர்ந்து பார்க்கும் யாவருக்கும் இது எளி தில் புரியும். வேறெந்த ஆலயத்திலும் இல் லாத வகையில் தனது கலை அம்சங்களை இங்கு வடித்துள்ளார் இக்கலைஞர். இவரது சேவை சுழிபுரம் பத்திரகாளித்தாயினுடைய ஆலய வரலாற்றிலே பொன் எழுத்துக் களால் பொறிக்கப்படவேண்டியன. இவை காலத்தால் அழியாதவை. என்றும் நிலைத் திருப்பவை.

இவரது சேவை பூத்துக் குலுங்கும் இவ்வேளையிலே இதைப்பார்த்து மகிழ்வ தற்கு இக்கலைஞர் எம்மிடையே இப்போது இல்லை. ஆனால் இவர் எமக்கு வழிகாட் டியாக இருந்து இலைமறைகாயாக ஆற்றிய சேவை பல்கிப் பெருகி எம்முடன் இருக்கிறது. பார்த்துப் பரவசமடைந்து மகிழ்கிறோம். கண்ணீர் மல்கிறோம். நன்றி பகருகின்றோம்.

அடுத்தது எமது ஆலயத்தர்மகர்த்தாக் களில் ஒருவரும் சபையின் நீண்டகாலத்தலை வராக இருந்து எம்மையெல்லாம் வழி நடத்திய செம்மல் அமரர் திரு இ. சுந்தரம் அவர்கள் எம்மிடையே இப்போது இல்லை.

இப்பெரியார் அம்பாளின் குடமுழுக்குக் காண மிகமிக ஆவலாக இருந்தார் நிர்வாகம், சமுகத் தொண்டு போன்றவற்றை இப் பெரியாரிடமிருந்துதான் ஆரம்பத்தில் நான் கற்றுக் கொண்டேன் என்பதைக் கூறிக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். ஆரம்பத்தில் எமது சபைக்கு வித்திட்டவர்களில் இவர் முக்கியமானவர். இவர் இட்ட வித்து இன்று முளைத்து வளர்ந்து பல்கிப் பெருகிப் பெருவிருட்சமாய்ப் பூத்துக் குலுங்குகின்றது. அன்னாரது பெருந்தன்மையைக் கூறிக்கொண்டே போகலாம் இவர் ஆலயத்தின் தர்மகர்த்தாவாக விருந்தாலும் சபைக்கு மதிப்புக்கொடுத்து, சபையின் தீர்மானங்களுக்கமைய தன்னை வழிநடத்திய ஒரு படித்த பண்பாளர்.

அடுத்தது எமது தர்மகர்த்தாக்களில் இன்னொருவரான அமரர் ஆசைப்பிள்ளை கிருஷ்ணர் இவரை எந்நாளும் ஆலய முன்றலில் காணலாம். அம்பாளின் ஆலயத்துக்கு வரும் அடியார்கள் மனதில் இவரது எளிமையான தோற்றம் என்றும் நிலைத்திருக்கும். இவர் ஆலயத்தின் உடமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் மிகவும் கண்ணுங்கருத்துமாய் இருப்பார் ஆலயச்சூழல் எந்நாளும் மிகவும் சுத்தமாக இருக்கவேண்டுமென்று விரும்பி தானே கூட்டித்துப்பரவாக்கி, திருநாவுக்கரசரைப்போல் சரியைத் தொண்டாகிய உளவாரப்பணியையும் செய்து மகிழ்வார். அன்னாரது செயற்பாடுகள் யாவும் எமது நிர்வாக வளர்ச்சிக்கு ஊன்று கோலாக விளங்கியது.

இன்னும் எங்கள் தாயினுடைய ஆலய நிர்மான வேலைக்கு, உதவிய கட்டிட நிர்மாணிகளை நினைவு கூர்ந்து பாராட்டி நன்றி நல்க வேண்டியவனாக உள்ளேன் ஆரம்பத்தில் 1988இல் கொட்டகைக்குரிய தூண்கள் நிர்மாணிக்கும் வேளையில் ஈடுபட்டு இவ்வேலையைச் செவ்வனே ஆரம்பித்துவைத்த மேசன் பாலு அவர்களுக்கும் எமது நிர்வாகத்தின் சார்பில் நன்றிகள் பல. இதனைத் தொடர்ந்து வேலை செய்த மேசன் திரு. பூலோகசுந்தரம்பிள்ளை. இவரது பணி எங்கள் ஆலயத்தில் அளப்பரியது கடந்த ஏழுவருடங்களாக (இடைக்கிடை விட்டுவிட்டு) இவ்வாலயத்தில் பணிபுரியும் திரு. பூலோகம் ஓர்கடின உழைப்பாளி. இரவு பகல் என்றும் பாராது நேரங்காலம் கணியாது தனது கடமையை தூய மனதுடன் செய்யும் ஒரு உத்தமத் தொழிலாளி, விசாலமான தொழில்நுட்ப அறிவைக் கொண்ட ஒரு கட்டிடக் கலைஞன் இன்றும் இவ்வாலயத்தில் இவரதுபணிதொடர்கிறது.

இந்நேரத்தில் அமரர் திரு வே. கந்தசாமி ஆசிரியர் அவர்களையும் நாம் நினைவு கூரக்கடமைப்பட்டுள்ளோம். இங்கு இவரது ஆக்கங்கள் சித்திரப்பொதியல்கள். அத்துடன் ஆலய நிர்மானத்துக்குத் தேவையான யோசனைகளைத்தந்து எம்மை வழி நடத்தினார். நேர்மையும் விசுவாசமுமுள்ள மேசன் பூலோகத்தைத் தந்துதவியதும் இவ்வாசிரியரேயாகும். இவரது நன்றி என்றும மறக்கப்பாலது அடுத்தபடியாக வெள்ளை வைரக்கல்லால் எங்கள் பத்திரகாளித் தாயினுடைய ஆலயத்தை மிளிரச் செய்த பெருமை அராலியூரைச் சேர்ந்த திரு இ. தங்கேஸ்வரனைச் சாரும். இவரது கைவண்ணத்தை எங்கள் ஆலயத்தில் கண்டு களிக்கலாம்.

கலைக்கோயிலாக எங்கள் தேவஸ்தானத்தை மிளிரச் செய்த பெருமை சிற்பச் சக்கரவர்த்தி சி செந்தூர்ராசாவைச் சாரும். இவர் பத்திரகாளித் தாயினுடைய விசுவாசம் மிக்க ஒரு பக்தன். ஒழுக்க சீலன். கண்ணியம் உடையவர் கருமமே கண்ணாக ஒரு குறுகிய காலத்துள் இவ்வளவு விக்கிரகங்களையும் உயிரோவியமாக எமக்கு வடித்துந்தந்த ஒரு கலை மேதை. இவரது திறமையையும், செயற்பாடுகளையும் எழுத்துக்களால் வர்ணிக்க என்னால் இயலாது இக்கலைஞன் வடிவமைத்த தெய்வ உயிரோவியங்களை நேரில் பார்த்து அறிவதுதான் சாலச் சிறந்தது. இத் தெய்வீக விக்கிரகங்கள் வாய்பேசுமானால் எங்கள் கலைஞான

னின் திறமைபற்றி ஆயிரமாயிரம் கதைகள் சொல்லும். வளர்க இவரது தெய்வீகக் கலைகள்.

மேலும் இத்தெய்வீக விக்கிரகங்களுக்கு வர்ணம் தீட்டி மென்மேலும் அழகுறச் செய்த திருநெல்வேலியைச் சேர்ந்த திரு இ. கனகராசா ஓவியர் அவர்கள் மிக மிகப் பாராட்டுக்குரிய ஒரு திறமைசாலி. தேவஸ்தானத்தின் முன் சுவரிலே அவர் வரைந்திருக்கும் ஓவியங்கள் மிக மிக அழகானவை. பார்ப்போரைப் பரவசமடையச் செய்பவையாகவுள்ளன.

அடுத்தபடியாக இவ்வாலயத்துக்குத் தேவையான கதவுகள் யாவும் வெகு அழகாகவும், உறுதியாகவும் செய்து பொருத்திய பெருமைக்கு உரியவர் சுழிபுரத்தைச் சேர்ந்த திரு ச. குணபாலசிங்கம் (ராசா) அவர்களாகும். காலநேரம் பாராது மிகக் குறுகிய நாளையில் இவ் வேலையைத் திருப்திகரமாக நிறைவேற்றிய பெருமை இவரைச் சாரும்.

மற்றய்து எமது அம்பாளின் ஆலயத்தின் மேற்புறத்தில் இரு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்குப்பக்கத்தில் ஒன்றும் தெற்குப்பக்கத்தில் ஒன்றுமாக, இவ் விரு சாலைகளையும் அழகுற வடிவமைத்தவர் வேலணையைச் சேர்ந்த எங்கள் மதிப்பிற்குரிய ஆசிரியர் செ. விக்னேஸ்வரநாதன் (B. Sc.) இவ்வாசிரியர் எந்தவிதப் பலனையும் எதிர்பாராது அம்பாளுக்குக் காணிக்கையாக இதை வடிவமைத்து வழங்கியுள்ளார். எவ்வளவோ வேலைப் பழுவுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து தனது உதவியாளருடன் இங்கு வருகைதந்து இவ்விரு சாலைகளையும் வடிவமைத்துத் தந்தமைக்கு நாம் என்றென்றும் இவருக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

மேலும் எமது ஆலயத்தில் புதிதாக எழுந்தருளியிருக்கும் காவல் தெய்வமாகிய வயிரவ சுவாமியாரையும் கிரியை மண்டபத்துக்கு முன்னால் அமர்ந்திருக்கும் சிம்மம் பலிபீடம் ஆகியவற்றையும் கல்லில் அழகுற வடிவமைத்துதவிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஸ்வப்பிரமஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் எங்களின் பாராட்டுக்குரியவராவார்.

எங்கள் சபை அங்குரார்ப்பணம் ஆகிய புதிதில் செயலாளராகவிருந்து பல சிக்கல்களுக்கு முகங்கொடுத்துத் தனது பணியை நெறிதவறாது ஆற்றிய திரு ச. சிவசுப்பிரமணியம் (சிவா மாஸ்டர்) தற்போது இங்கு இல்லாது விட்டாலும் அவரது சேவையைப் பாராட்டுகின்றோம். இவரைத் தொடர்ந்து சிறிது காலம் செயலாளராகவும் காரியஸ்தராகவும் பணியாற்றிய அமரர் திரு க. சபாபதி அவர்களின் பணியும் இவ்வாலயத்தில் மகத்தானது. நிர்வாகத்தை ஒரு கட்டுக்கோப்பாக இயக்குவதற்கு நமக்கு வழிகாட்டியவர் இவரேயாகும்.

கடந்த 3 வருடங்களுக்குமேல் எங்கள் தேவஸ்தானத்தில் பணியாற்றிய திரு வ. தர்மலிங்கம் அவர்களின் பணி இவ்வாலயத்தில் மகத்தானது. இவரது காலத்தில் தான் ஆலய வேலைகள் பல நெருக்கடிமத்தியில் நடந்தேறின. நிதி சேகரிப்பு விடயத்தில் இவர் எங்களுக்குப் பேருதவி புரிந்துள்ளார்.

அடுத்தது எங்கள் பரிபாலன சபையின் நிர்வாகச் செயலாளன் என்றவகையில் எங்கள் நிர்வாகத்தைப் பற்றியும் கூற வேண்டியுள்ளது. எங்கள் சபை இறுக்கமான, கண்டிப்பான நிர்வாகக் குழுவைக் கொண்டது. அடுத்தது ஒத்த கருத்தைக் கொண்ட நிர்வாக உறுப்பினரைக் கொண்டது எப்படி இவ்வாலயத்தை முன்னேற்றலாம் என்று சதா எண்ணிக் கொண்டிருக்கும் உத்தியோகத்தர்களைக் கொண்டது. பொது நிறுவனங்களிலே சிக்கல்கள் தோன்றுவதற்கு மூல காரணம் "பணம்" இன்று எல்லோரிடமும் காணப்படும் இப்பணம் கொடிய நஞ்சையும் விடக் கொடியது. இக் கொடிய பணத்தை

இல்லாதவனை சமூகத்தில் நாம் ஒருவரும் மதிப்பதில்லை. "இது வரலாறு" இதில் கோவில்ப் பணம் மிகமிகக் கொடிய நஞ்சாகும். இதனுடன் பழகுவதில் நிர்வாகத்தினராகிய நாம் மிகவும் அவதானமாக இருக்கின்றோம். இவ்விடயத்தில் எங்களிடம் கைகளங்கமானவர் எவரும் இல்லை என்று துணிந்து கூறுகிறேன். ஒரு ஆயிரம் ரூபா கோவில்ப் பணம் இருந்தால் அதை எப்படி ஐயாயிரமாக்கி என்ன புதுவேலைத் திட்டத்தை ஆலயத்தில் ஆரம்பிக்கலாம் என்று சிந்திப்பவர்கள் தான் நாம்

ஒரு நிர்வாகத்தின் ஆணிவேர் நிர்வாகச் செயலாளன். ஒவ்வொரு அசைவுக்கும் அவரே பொறுப்பு. இந்த வகையில் இப் பாரிய செயற்றிட்டத்தைச் செய்து நிறைவாக்குவதற்கு எங்கள் நிர்வாகத்தினர் ஆற்றிய பங்களிப்பினை என்னால் எழுத்தில் வர்ணிக்க முடியாது. குறிப்பாக நாங்கள் யாவரும் அறிந்த வகையில் உப செயலாளரின் பணி மிகவும் மகத்தானது. இவர் செயலாளரிலும் பார்க்க ஒருபடி முன்னேறியுள்ளார். உப செயலாளராகிய திரு. மகேந்திரராசாவின் நினைவெல்லாம் ஆலயத்தின் மேல்தான். இக்கோவிலை அழகுறக் கட்டி நிறைவாக்கிய பெருமை அவரையே சாரும், கடந்த ஒரு வருடத்துள் ஒரு பெரும் செயற்றிட்டம் உருவாகியுள்ளது. இரவு பகலாக அலுக்காது, சலிக்காது, கண்துஞ்சாது தனது சொந்தப் பணத்தைச் செலவளித்துக் கொண்டு சென்று ஒவ்வொரு செயல்களையும் கவனித்துக் கொண்டு வருவார். "பெருமைக்கும் ஏனைய சிறுமைக்கும் அவரவர் கருமமே கட்டளைக்கல்" இவரது உடல் உழைப்பு இவ்வாலயத்தில் அளப்பரியது. எழுத்தில் வடிக்க இயலாது இவருக்கு அம்பாள் சகல நலன்களையும் நல்க எல்லாம் வல்ல இறைவியை இறைஞ்சுவோமாக.

எமது சபையின் நிர்வாக உறுப்பினர்களுக்கு உமது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொடர்ந்து இவ்வாலயத்தின் நிர்மாண வேலைகளுக்கு அயரது உழைத்த மேற்குறிப்பிட்ட கலைஞர்கள் யாவருக்கும் நிர்வாகத்தின் சார்பில் எங்கள் நன்றிகள் உரித்தாகுக.

எங்கள் சுழிபுரம் பத்திரகாளித்தாய் எல்லாம் வல்லவள். எங்கும் நீக்கமற நிறைந்தவள் அவள் வதியும் புனித மண்ணைத் தீண்டியவர்கள் பாக்கியசாலிகள். அதைவிட அவளுக்கு ஒரு ஆலயம் அமைப்பதற்கு நிதி உதவி, பொருள் உதவி வழங்கியவர்கள் மிக மிகப் பாக்கியசாலிகள் கல் சுமந்து, மண் சுமந்து கட்டியவர்கள் அதிலும் பாக்கியசாலிகள்.

எல்லாம் வல்ல எங்கள் சுழிபுரம் பத்திரகாளித்தாய் ஒரு இன மக்களுக்கோ, ஒரு கிராமத்து மக்களுக்கோ உரியவளல்ல பத்திரகாளியினுடைய அடியவர்கள் இப்பாரெங்கும் பரந்து வாழ்கிறார்கள். இதற்குச் சான்று பத்திரகாளியினுடைய ஆலயத் திருப்பணிக்கு எங்கிருந்தெல்லாமோ பணம் வந்து குவிந்துள்ளதே.

இந்தவகையில் எங்கள் பத்திரகாளிக்கு ஒரு ஆலயம் அமைப்பதற்கு பணமாகவும், பொருளாகவும், சரீர உதவியாகவும் நல்கிய யாவருக்கும் எங்கள் நிர்வாகத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றியைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கு. பொன்னுத்துரை
பொதுச் செயலாளர்

★

★ பத்து வருடங்களாக ★ பந்தல் ★ கதிரை ★

குறைந்த கட்டணத்தில் உங்கள் திருப்திக்கு ஏற்ற வகையில்
சேவை செய்து கொண்டு வரும் ஸ்தாபனம்

மற்றும் ★ கடைச்சல் வேலைகளுக்கும்
★ மின் ஒட்டு வேலைகளுக்கும்

சிறந்த முறையில் செய்து கொடுப்பதிலும் முன்னணியில் நிற்பவர்கள்

# கிருஷ்ணா இரும்புத் தொழிற்சாலை

மெயின் றோட், சங்கானை,

உரிமையாளர்கள்

செ. கோபாலகிருஷ்ணன் க. வசந்தில்ராசா

★★★★★★★★★★★★★★★★

## சுவை அமுதம் வெதுப்பகம்

சுழிபுரம் சந்தி

சகல விதமான மருந்து வகைகளையும்,

பாடசாலை உபகரணங்களையும்

நிதான விலையில் பெற்றுக்கொள்ள

## அப்பாள் மருந்தகம்

பிரதான வீதி,

சுழிபுரம்

*சுழிபுரம் ஸ்ரீ வீரபத்திரசுவாமி உடனுறையும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகமும் அதனையடுத்த சங்காபிஷேகமும் இனிது நடைபெற்று நாட்டில் சாந்தி, சமாதானம் மேலோங்கி மக்கள் நல்வாழ்வு வாழ அம்பாள் அருள்பாலிப்பாள் என்று வணங்கி எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.*

# ஹோட்டல் சீவம்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் (விருந்தினர் விடுதி)

**55, சிவானந்தா வீதி, கொட்டாஞ்சேனை**

**கொழும்பு 13.** தொலைபேசி 326522

**கிளை:-** 391/6 காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு—06

தொலைபேசி 591590

வெளி நாடுகளில் இருந்து தலைநகர் கொழும்பு வருபவர்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து கொழும்பு வருபவர்களும் சகல வசதிகளுடனும் தங்குவதற்கு ஏற்ற வசதிகள் உண்டு என்பதை அறியத்தருகின்றோம்.

# நன்றியுரை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்ற பொய்யா மொழியார் வள்ளுவர் வாக்கிற்கிணங்க அம்பாளின் மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நிறைவேற்றுவதற்குதவிய அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அம்பாளின் மகா கும்பாபிஷேகத்தை விதிக்கமையச் சீரிய முறையில் நிறைவேற்றி வைத்த பிரதமகுரு கிரியாகலாபமுத்தாமணி சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு எமது பரிபாலன சபையின் சார்பில் விசேஷ நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அடுத்து இவருக்கு உதவியாகவிருந்த ஏனைய குருமாருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக. இவர்கள் எல்லோரையும் ஒருங்கிணைத்து அம்பாளின் குடமுழுக்கைத் தன்னால் இயன்றவரை சிறப்பாகச் செய்து முடித்த கோவில் ஐயாவுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

மேலும் இக்கும்பாபிஷேகத்துக்கு உதவிய மேளவாத்தியக் காரர்கள், பூமாலை, அபிஷேகத்திரவியங்கள், தந்து உதவியவர்கள், ஒலி ஒளி அமைத்தவர்கள், முதலியயாவர்க்கும், ஓடி ஆடிச் சலிப்படையாமல் இரவு பகல் பாராது பணியாற்றிய ஆலயச் சூழலில் வாழும் இளைஞர்கள் யாவருக்கும் எமது சபையின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாட்கள் நடந்தேறிய மண்டலாபிஷேகத்தை நேரந்தவறாது ஒழுங்காகவும், சீராகவும் நடாத்திவைத்த மேன்மைக்குரிய குரு சிவஸ்ரீ கோ. வரதராசக் குருக்கள் அவர்கள் என்றும் நம் மக்களால் நினைவு கூரக் கூடியாவர். இவருக்கும் எல்லோரது சார்பிலும் என் இதயம் கலந்த நன்றிகள் உரித்தாகுக.

மேலும் இந்த கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்களும் சிவாச்சாரியர்களுக்கு உதவியாகவிருந்து, நெறிப்படுத்த மண்டலாபிஷேகம் சிறப்பாக நடப்பதற்கு நேரங்காலம் பாரா பணியாற்றிய திரு சி. சலபதி அவர்களுக்கும் எங்கள் உளங்கலந்த நன்றிகளைக் கூறிக் கொள்கிறோம்.

நான் எங்கள் நிர்வாகிகளுக்கு மனமார்ந்த நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். கண்ணியமாகவும் கடமை உணர்சியுடனும் உழைத்த நிர்வாகிகள் பாராட்டுக்குரியவர்கள் நெருக்கடி மிகுந்த நேரத்தில் மிகுந்த நிதானத்துடன் செயற்படுபவர்கள் கும்பாபிஷேகச் செயற்பாடுகளை நெறிப்படுத்தி நிறைவாக்கியவர்கள் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற உண்மையை உணர்த்தியவர்கள். எனது இதய பூர்வமான நன்றிக்குரியவர்கள்.

எங்கள் கைகளில் தவழும் இம்மலரை மிக மிகக் குறுகிய காலத்துள் மூழுப்பொலிவுடனும், அழகுடனும், பதித்து உதவிய சங்கானை திருமொழி அச்சக உரிமையாளர்கள், மற்றும் ஊழியர்களுக்கும் எமது நிர்வாகத்தின் சார்பில் மானமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றும் இம்மலருக்கு மனமுவந்து ஆசிகள் வாழ்த்துரைகள் வழங்கிய பெருந்தகைகளுக்கும், ஆய்வுக்கட்டுரை வழங்கிய யாழ் பல்கலைக் கழகப் பேராசிரியர்களுக்கும், கட்டுரைகள் வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும், இம்மலருக்கு ஆதரவு அளித்த வணிகப் பெருமக்களுக்கும், விளம்பரம் சேகரிக்க உதவிய அன்பர்களுக்கும், மற்றும் கும்பாபிஷேகக்காலங்களில் பல்வேறு உதவிகள் வழங்கியயாவருக்கும் நிர்வாகம் சார்பில் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிர்வாகம் சார்பாக கு. பொன்னுத்துரை
நிர்வாகச் செயலாளர்

அன்பளிப்பு:

# ஆஞ்சனேயர் உணவகம்

## பஸ் நிலையம்

### சங்கானை

## எங்கள் விளம்பரதாரர்களை



## ஆதரியுங்கள்

தலைமை
பொதுச் சேவைப் பிரிவு



# கான் ரெக்ஸினால்

திருநெல்வேலிச் சந்தி

அன்பளிப்பு

# ஆறுமுகம் சிற்பாலயம்

காளி கோவிலடி,
திருநெல்வேலி மேற்கு
யாழ்ப்பாணம்

திருமொழி அச்சகம், சங்கானை